3 0 JUL 1966

ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 30	ஜூலை 1966	இதழ் 7

இருபதாண்டுத் திட்டம்

இந்தியாவின் கல்வித்துறை முழுவதையும் விரிவான முறையில் அலசி ஆராய்ந்து, அதில் காணப்படக்கூடிய குற்றங்களையும் குறைபாடுகளையும் தெளிந்து அறிந்து, அதனைச் சீர்திருத்தி அமைப்பதற்கான வகைகளையும் முறைகளையும் திட்டவட்டமான முறையில் எடுத்துக் கூறுவதற்காக, இருபத்தியொரு மாதங்களுக்கு முன்னால் இந்தியப் பேரரசால் அனைத்திந்தியக் கல்விக் குழு ஒன்று நிறுவப்பட்டது அல்லவா? அந்தக் குழுவினர் சில வாரங்களுக்கு முன்னர் தங்கள் விரிவான அறிக்கையை இந்திய அரசாங்கத்திடம் சேர்த்துள்ளார்கள்.

கல்விக் குழுவின் இந்த அறிக்கை, ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை உள்ள எல்லா நிலைகளிலும் செய்யப்பட வேண்டிய பல்வேறு மாறுதல்களை விரிவான முறையில் எடுத்து விளக்குகிறது. அறிக்கையின் பரிந்துரைப் பகுதி மட்டும் 1500

பக்கங்கள் கொண்ட ஒரு மாபெரும் புத்தகமாகக் காட்சியளிக்கிறது. இந்த அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகள் அல்லது சிபாரிசுகள், எந்தெந்த அடிப்படையில், என்னென்ன காரணங்களுக்காகத் தரப்பட்டுள்ளன என்பதை விளக்கமாக எடுத்துரைக்கும் துணைத்தொகுப்பு ஒன்று, இந்த அறிக்கையோடு தரப்பட்டுள்ளது. அந்தத் துணைத் தொகுப்பு நூலின் பக்கங்கள் 3000 ஆகும். ஆகவே, கல்விக் குழுவின் தலையாய அறிக்கையும் அதன் விளக்கவுரையுமாகச் சேர்ந்து, மொத்தத்தில் நான்காயிரத்து ஐந்நூறு பக்கங்கள் கொண்ட தனிப் பெரும் சுவடியாகத் தோற்றம் அளிக்கின்றன.

கல்விக் குழுவின் அறிக்கையிற் காணப்படுகிற சொற்களின் எண்ணிக்கை ஐந்து லட்சம் என்று தெரிகிறது. இந்தக் குழுவினர், தங்கள் பணியை முடிப்பதற்கு முன்னால் 101 ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியுள்ளார்கள்; இந்தியப் பெரு நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கல்வித்துறையோடு தொடர்புடைய 9000 பேர்களின் கருத்துரைகளைக் கேட்டு அறிந்துள்ளார்கள்; 2400 மகஜர்களையும் குறிப்புகளையும் பரிசீலனை செய்துள்ளார்கள். இந்தக் குழுவின் பணிகளுக்காக இதுவரை 16 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து உள்ளமெனும் திரையில் ஓடவிட்டுப் பார்த்தால், இந்தக் குழுவின் பணி எத்துணை விரிவான முறையில் நடைபெற்றுள்ளது என்பதும், இந்தக் குழுவின் அறிக்கை எவ்வளவு இன்றியமையாத சிறப்புடையது என்பதும், இந்த அறிக்கையைக் கல்வித் துறையோடு தொடர்புடைய அத்தனைப்பேரும் நுணுக்கமான முறையில் அலசி ஆராயவேண்டியது எவ்வளவு அவசியமானது என்பதும், தெள்ளத் தெளிவாக விளங்கும்.

இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இந்தக் கல்விக் குழுவை ஒரு சர்வதேசக் குழு அல்லது பன்னாட்டுக் குழு என்று இந்தியாவின் கல்வி அமைச்சர் திரு சாக்ளா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் கூற்று முற்றிலும் பொருத்தமான ஒன்றே ஆகும். ஏனென்றால், பதினேழு உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில், இந்தியாவைச் சேர்ந்த கல்வித் துறை வல்லுநர்கள் மட்டு

மல்லாமல், அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டின், ஜப்பான், ஐக்கிய நாடுகள் மன்றத்தின் கல்விக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளார்கள். அதுமட்டுமல்ல, இந்தக் கல்விக் குழுவுக்கு ஆய்வுரைகள் கூறுவதற்காக அமைக்கப்பட்ட கல்வித் துறை வல்லுநர் குழுவில், கனடா, ஸ்வீடன், பிரான்ஸ் முதலிய பிற நாடுகளைச் சேர்ந்த பதினொரு பேர் இடம் பெற்றுள்ளார்கள். இத்தகைய நிலையில் இந்தக் கல்விக் குழுவைப் பன்னாட்டு வல்லுநர் குழு என்று அழைப்பது, முற்றிலும் பொருத்தமான செயலே அன்றோ?

இந்தியா முழுவதும் கல்வியானது எல்லா நிலைகளிலும் கட்டணமின்றித் தரப்படுகிற நிலையை அடைய நாம் முழு மூச்சுடன் முயற்சி செய்ய வேண்டும் என்று கல்விக் குழுவின் அறிக்கை எடுத்துக் கூறுகிறது. இதனை நாம் நெடுங்காலத்திற்குப் பின்னர் நிறைவேற்றி வைக்கப்படக் கூடிய ஓர் இன்பக் கனவு அல்லது இதயகீதம் என்றுதான் ஏற்றுக்கொள்ள முடியுமே தவிர உடனடியாக நிறைவேற்றக் கூடிய நடைமுறைத் திட்டம் என்று கருத முடியாது. கல்லூரிக் கல்வி உட்பட எல்லா நிலைகளிலும் எல்லோருக்கும் கல்வியை இலவசமாக அளிப்பது என்றால், அதற்கு மாபெரும் அளவில் பணத்தைச் செலவிடவேண்டியிருக்கும். அவ்வளவு பெருந்தொகையை இந்தியாவில் உள்ள அரசாங்கங்களால் இப்போது உள்ள வறுமைச் சூழ்நிலையில் திரட்ட முடியாது என்பது தெள்ளத்தெளிவாக விளங்கும் ஓர் உண்மை. முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அத்தகைய ஒரு நற்காலம் அல்லது பொற்காலம் உதயம் ஆகக்கூடும். ஆனால் உடனடியாக அத்தகைய செயலில் ஈடுபடுவது இயலாத செயல். ஆனால், அந்த இறுதி இலட்சியத்தை அடைவதற்கான முதற்படியாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவதற்குள், இந்தியா முழுவதும், ஆரம்பக் கல்வியை மட்டுமாவது கட்டணமின்றித் தருவதற்கான வழிவகைகளைக் கண்டாக வேண்டும் என்று கல்விக் குழுவினர் தெரிவித்துள்ள கருத்துரை, அனைவராலும் ஏற்கப்படக்கூடிய ஒன்றாகும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை ஆரம்பக் கல்வி முழுவதும் இலவசம் என்கிற நன்னிலை ஏற்பட்டு ஆண்டுகள் பல உருண்டோடி விட்டன. தமிழகம் செய்துகாட்டியுள்ள இந்த அருஞ்செயலை இந்தியாவின் பிற மாநிலங்களும் செய்து முடிப்பது இன்றியமையாதது என்பதை எவரும் மறுத்திட இயலாது.

நாட்டின் முன்னேற்றம் பாதுகாப்பு, நல்வாழ்வு ஆகியவற்றிற்கான அரிய ஒரு கருவியாக அமையும் முறையில், அறிவியலை அடிப்படையாகக் கொண்டதாகவும், அதே சமயத்தில் இந்தியப் பண்புகளுக்குப் பொருந்திய ஒன்றாகவும் இப்போதைய கல்வி முறையை அடியோடு மாற்றியமைக்க வேண்டும் என்று கல்விக் குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது. கல்வியின் வளர்ச்சிக்காக இந்தியா முழுவதும் இப்போது ஆண்டு ஒன்றிற்கு ஏறத்தாழ 600 கோடி ரூபாய்தான் செலவிடப்படுகிறது. இந்தத் தொகை மிகவும் குறைவு என்பதும், இதனைப் படிப்படியாக உயர்த்தி, அடுத்த இருபது ஆண்டுகளின் முடிவில் இதனை 4000 கோடி ரூபாய் என்கிற அளவுடையதாக ஆக்கவேண்டும் என்பதும் குழுவின் அழுத்தந் திருத்தமான பரிந்துரை ஆகும். தற்போது இந்தியாவில் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை, ஆண்டு ஒன்றுக்குத் தலைக்கு ரூபாய் 12 என்கிற அளவில் இருக்கிறது. இக் கல்விச் செலவு அடுத்த இருபது ஆண்டுகளில் தலைக்கு ரூ 54 என்கிற அளவை, அடைந்தாக வேண்டும் என்பது, கல்விக் குழுவின் கருத்து. இந்தியாவின் வருமானத்தில் கல்விக்காகச் செலவிடப்படும் தொகையின் விகிதம் இவ்வாறு உயர்ந்தால்தான் இந்த நாட்டில் கல்வியானது போதுமான அளவுக்கு முன்னேற முடியும் என்பது கல்விக் குழுவின் திட்டவட்டமான முடிவாக அமைந்துள்ளது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் கல்வியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது என்பது, உலகம் எங்கணும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள உண்மை; விவாதத்திற்கு உரிய பொருள் அன்று. எந்த அளவுக்கு ஒரு நாடு கல்வித்துறையில் முன்னேறியுள்ளதோ அந்த அளவுக்குத்தான் நாட்டில் அரசியல் முன்னேற்றமோ, பொருளியல் முன்னேற்றமோ, அறிவியல் முன்னேற்றமோ ஏற்பட முடியும் என்பதை, உலக வரலாற்றின் பல்வேறு அத்தியாயங்கள் அழுத்தந் திருத்தமாக அறிவித்தபடி உள்ளன. கல்வி என்கிற கடைக்கால் அழுத்தமாகவும் ஆழமாகவும் அமைக்கப்பட்டால்தான் நாடு என்கிற மாளிகை உறுதியாகவும் கம்பீரமாகவும் நிலைத்து நிற்க முடியும். இந்த ஏற்றம் மிக்க உண்மையைத் திட்டவட்டமான முறை

யில் கல்விக் குழுவினர் உணர்ந்துள்ளனர். அப்படி உணர்ந்துள்ள காரணத்தால்தான், கல்விச் செலவின் அளவு பல மடங்காக உயர்ந்தாக வேண்டும் என்பதை அவர்கள் இவ்வளவு தெளிவாக வற்புறுத்திக் கூறியுள்ளார்கள்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் ஆகிய மூவகை ஆசிரியர்களின் ஊதியங்களும் கணிசமான முறையில் உயர்த்தப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாத செயல் என்பது, கல்விக் குழுவின் திட்டவட்டமான கருத்து ஆகும்.

வரப்பு உயர்ந்தால்தான் நீர் உயரும்; நீர் உயர்ந்தால்தான் நெல் உயரும்; நெல் உயர்ந்தால்தான் மக்களின் வாழ்வு உயரும் என்பதுபோல, ஆசிரியர்களின் ஊதியங்கள் உயர்ந்தால்தான் அவர்களால் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் உயரும். கல்வியின் தரம் உயர்ந்தால்தான் நாடு உயரும். இந்த மாபெரும் உண்மைகளை உயர்ந்த கல்விக்குழுவினர், அப்படி உணர்ந்த காரணத்தால், பல நிலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குக் கீழ்க்கண்ட ஊதிய விகிதங்களை அரசாங்கத்தினர் தரவேண்டும் என்று சிபார்சு செய்துள்ளனர் :—

செகண்டரி கிரேட் பயிற்சி ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் ரூ. 150: அதிக பட்ச அடிப்படை ஊதியம், ரூ. 250.

நடுத்தரப் பள்ளிகளில், அதாவது உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம், ரூ. 220; அதிக பட்ச ஊதியம் ரூ 400.

மேல் பட்டப் படிப்பும் பெற்று மேற்படிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதம், ரூபா. 300 முதல் ரூ. 600 வரை.

இணைந்த கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான விகிதங்கள்:—விரிவுரையாளர், ஜூனியர் விகிதம்: ரூ. 300—25—600; சீனியர் விகிதம்:—ரூ. 400—30—640—40—800. சீனியர் விரிவுரையாளர் அல்லது ரீடர்:—ரூ. 700—40—1100.

இந்திய அரசாங்கம்—மாநில அரசாங்கங்கள் ஆகியவற்றின் தாராள உதவியுடன் இந்தப் புதிய ஊதிய விகிதங்கள் உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும் என்பது, குழுவின் கருத்து.

ஒரே கட்டத்தில் புதிய விகிதங்களை அரசாங்கத்தால் நடைமுறைக்குக் கொண்டுவர முடியாவிட்டால் படிப்படியாக ஐந்து ஆண்டுகளில் அமுலுக்குக் கொண்டு வரலாம் என்பதும், அரசாங்கம் உள்ளாட்சி மன்றங்கள், தனியார் நிர்வாகம் ஆகியவற்றின் கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் ஒரே அளவுடையனவாக இருக்க வேண்டும் என்பதும், புதிய விகிதங்களை அமுலாக்குவதால் ஏற்படும் கூடுதல் செலவில் 80 சத விகிதத்தை மத்திய அரசாங்கமும் மீதமுள்ள 20 சத விகிதத்தை மாநில அரசாங்கங்களும் ஏற்க வேண்டும் என்பதும், இந்தத் தொடர்பில் கல்விக் குழுவால் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் ஆகும்.

இந்தப் பரிந்துரைகள் யாவும், நியாயமானவை; நியாய உள்ளம் படைத்த யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவை.

இன்றைய மாணவர்களை நாளைய குடிமக்களாக மாற்றி அமைக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், ஆசிரியப்பெருமக்கள்.

அவர்களுடைய பணி பொறுப்பும் சிறப்பும் மிகுந்தது; தொல்லையும் துயரமும் நிறைந்தது; ஆனால் அதே சமயத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருப்பது.

மிகப் பெரிய பணியை, மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு, மிகப் பொறுப்பான முறையில், மிகப் பல ஆண்டுகளாக, பொறுமையான முறையில் ஆற்றிவரும் சமுதாயம், ஆசிரிய சமுதாயம்.

ஆசிரியப் பெருமக்களின் குடும்பங்களில் மிகப் பெரும்பாலானவை, வறுமைத் தேளால் கொட்டப்பட்டு, வேதனைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. துயரமும் துன்பமும் வேதனையும் வாட்டமும் நிறைந்த இந்தச் சூழ்நிலையிலிருந்து அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டியது, அரசாங்கத்தின் தலைசிறந்த கடமையாகும்.

இந்த மாபெரும் கடமையைத் தெள்ளத் தெளிவான முறையிலும் திட்டவட்டமான வகையிலும் வற்புறுத்திக் கூறியுள்ள கல்விக்

குழுவினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்; எவ்வளவு புகழ்ந்தாலும் பொருந்தும்.

கல்விக் குழுவினர் தெரிவித்துள்ள புதிய ஊதிய விகிதங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமானால் அரசாங்கத்திற்குச் சில கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகும் என்பது உண்மையே. ஆனால் அந்தச் செலவை ஏற்க அரசாங்கம் துளியளவும் தயங்குதல் ஆகாது. அச் செலவு, இன்றியமையாத செலவு; பல ஆண்டுகளுக்கு முன்னமே ஏற்கப்பட்டிருக்க வேண்டிய செலவு; ஆசிரியர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டுமானால், செய்யப்பட்டே தீர வேண்டிய செலவு. ஆகவே அச் செலவின் அளவை ஒரு காரணமாகக் காட்டி அதனை ஒதுக்கி வைக்கவோ தள்ளிப் போடவோ அரசினர் கருதக் கூடாது. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. எண்ணம் இருந்தால் வழி உண்டு. அரசினர் நினைத்தால் இச் செலவிற்கு உரிய தொகை கிடைக்கும்.

கல்வி பற்றிய எல்லாச் செய்திகளிலும் இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற, இந்திய அரசாங்கக் கல்வி அமைச்சகத்தில் பள்ளிக் கல்வி ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பது, கல்விக் குழுவின் மற்றொரு பரிந்துரையாகும். பரிந்துரையை நாம் மனமார வரவேற்கிறோம். கல்வித் துறையில் ஏதாவது மாறுதலோ சீர்திருத்தமோ செய்யப்பட வேண்டுமானால் அந்த மாறுதலை அல்லது சீர்திருத்தத்தை அமைச்சர்கள் தங்கள் மனம் போன போக்கில் செய்வார்களாயின், அச் செயலால், நன்மையை விடத் தீமையே மிகுதியாக விளையும் என்பதைச் சென்ற பதினைந்து ஆண்டுக்கால அனுபவத்தின் வாயிலாக நாம் நன்கு அறிந்துள்ளோம். சீர்திருத்தங்களை அமைச்சர்கள், தங்களுக்குச் சரி என்று தோன்றுகிற முறைப்படி செய்யாமல், கல்வித் துறையில் நீண்ட கால அனுபவமும் பழக்கமும் ஆற்றலும் அறிவும் படைத்த வல்லுநர்களின் கருத்துரைகளைக் கேட்டு, அக் கருத்துகளுக்கு ஏற்ற முறையில் செய்வார்களாயின் சிறந்த நன்மை விளையும் என்பது உறுதி. ஆகவேதான், கல்வி வல்லுநர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அனைத்திந்திய அடிப்படையில் அமைதல் வேண்டும் என்கிற பரிந்துரை, நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது. ஆனால் ஒன்று, அனைத்திந்திய அடிப்படையில் அத்தகைய ஒரு குழு

அமைவது மட்டும் போதாது ஒவ்வொரு மாநிலத்திற்கும் அத்தகைய கல்வி அறிஞர் ஆய்வுக் குழு ஒன்று அமைதல் வேண்டும். மாநில அரசினர் எத்தகைய கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள முனைந்தாலும் அக் குழுவின் கருத்தையும் ஒப்புதலையும் பெற்ற பின்னரே அதனை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்கிற ஒரு சிறந்த மரபை மாநில அரசுகள் உருவாக்கி, அதனை எந்நிலையிலும் தவறாமல் பின்பற்ற வேண்டும். இந்தியாவின் கல்வி வளர்ச்சி சீரான முறையில்—சிறப்பான வகையில் நடைபெற வேண்டுமானால் இத்தகைய நல்லொழுக்க நடைமுறை ஒன்று உருவாக வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

கல்வி அமைப்பின் பல்வேறு கட்டங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றியும் கல்விக் குழுவினர் கருத்துரை தந்துள்ளார்கள். 1. ஏழு ஆண்டுகள் கொண்ட ஆரம்பக் கல்வி. 2. அதனைத் தொடர்ந்து, மூன்று ஆண்டுகள் கொண்ட நடுத்தரக் கல்வியின் முதற் கட்டம்—அதாவது "லோயர் செகண்டரிக் கட்டம்" 3. அதன் பின், இரண்டு ஆண்டுகள் கொண்ட நடுத்தரக் கல்வியின் உயர் கட்டம்—அதாவது. "ஹையர் செகண்டரிக் கட்டம்." 4. அதனை அடுத்துக் கல்லூரிக் கல்விக் கட்டம் இக் கட்டத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. முதற் பிரிவில் மூன்று ஆண்டுகள் கொண்ட பட்டப் படிப்பும், அதை அடுத்த பிரிவில் இரண்டு ஆண்டுகள் கொண்ட பட்டப் பிற்கால படிப்பும் (எம் ஏ., எம். எஸ்ஸி முதலியவை) அடங்கும்.

இதுதான் கல்விக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய கல்வி அமைப்பு. இப்போது கல்லூரிகளில் உள்ள பிரியுனிவர்சிடி எனப்படும் புதுமுக வகுப்பு, இந்தப் புது அமைப்பின்படி, நடுத்தரக் கல்வியின் உயர் கட்டத்தின் ஒரு பகுதியாக இணைந்துவிடும். அப்படி இணைகின்ற காரணத்தால் அக்கல்வி உயர் நடுத்தரப் பள்ளிகளால் தரப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

புதுமுக வகுப்பைக் கல்லூரிகளிடமிருந்து பறித்தெடுத்துக் குறிப்பிட்ட சில உயர் நிலைப் பள்ளிகளிடம் தரமுனைகிற இந்த மாறுதல் சிறிதளவும் தேவையில்லாத ஓர் ஏற்பாடு என்பதே நம் கருத்து. ஏனென்றால் இத்தகைய மாறுதலால், மாணவர்களுக்கும் சரி, ஆசிரியர்களுக்கும் சரி, கல்வி நிறுவனங்களுக்கும் சரி, குறிப்பிடத்தக்க

எத்தகைய நன்மையும் ஏற்பட முடியாது. இப்போது உள்ள நிலையில், பெரும்பாலான கல்லூரிகளின் வருமானத்தில் மிகப் பெரும் பகுதி, புகுமுக வகுப்புகளிலிருந்துதான் கிடைக்கிறது. கல்லூரிக் கல்வியிலிருந்து புகுமுக வகுப்பை அகற்றி விட்டால், பெரும்பாலான கல்லூரிகள், தங்களை நடத்திச் செல்வதற்குத் தேவையான பண வசதியின்றித் தத்தளித்து, எப்படித்தான் வாழ்வது என்கிற பரிதாபம் மிகுந்த நிலைக்குத் தள்ளப்படும் என்பது உறுதி. அத்தகைய நிலையில் அவற்றை நடத்திச் செல்வதற்குத் தேவையான பணம் முழுவதும் அரசாங்கத்தாலேயே திரட்டி அளிக்கப்பட வேண்டியிருக்கும். அதுமட்டுமல்ல, எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகள் புகுமுக வகுப்பை நடத்த வேண்டியிருக்குமோ, அந்தப் பள்ளிகளுக்கெல்லாம் ஏராளமான அளவில் புதிய செலவு உருவாகும். புகுமுக வகுப்புக்குத் தேவையான வகுப்பு அறைகள், கருவிகள், ரசாயனம், பௌதிகம், பயிர் நூல், விலங்கு நூல் ஆகிய துறைகளுக்கான ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கும் பெறுவதற்கும் ஒவ்வோர் உயர்நிலைப் பள்ளியும் நூறாயிரக் கணக்கில் பணத்தைச் செலவிட வேண்டியிருக்கும். பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகளால் அத்துணைப் பெருந்தொகையைத் திரட்ட முடியாது. ஆகவே அத் தொகையைத் திரட்டும் பொறுப்பும் அரசாங்கத்தின் தோள்கள் மீதே விழும். இவ்வளவு செலவும் தேவையற்ற செலவு என்பதே நம் கருத்து ஏனென்றால், இவ்வளவு செலவு செய்து, புகுமுக வகுப்பைக் கல்லூரிகளின் பொறுப்பிலிருந்து அகற்றி, உயர் நிலைப் பள்ளிகளிடம் ஒப்படைப்பதால், துளியளவு நன்மையும் விளையப் போவதில்லை. ஆகவே, இந்த மாறுதலைச் செய்வதில் நாட்டின் பணத்தையும் நேரத்தையும் நினைப்பையும் முயற்சியையும் வீணாக்காமல், தற்போது உள்ளபடி, எட்டாண்டுக் கால ஆரம்பக் கல்வி, மூன்றாண்டுக் கால நடுத்தரக் கல்வி, அதனைத் தொடர்ந்து புகுமுக வகுப்பு உள்ளிட்ட கல்லூரிக் கல்வி என்கிற மூன்று கட்டங்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதுதான் சாலச் சிறந்த ஏற்பாடாகும்.

கல்விக் குழுவினரால் அளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் சில, இவ்வாறு பொருத்தம் அற்றனவாக இருந்த போதிலும், பெரும்பாலான ஆய்வுரைகள், இன்றியமையாத இயல்பு உடையனவாகவும்

உடனடியாக ஏற்கவேண்டிய சிறப்பு மிகுந்தனவாகவும், போற்றிப் புகழ வேண்டிய சீர்மை செறிந்தனவாகவும் இருக்கின்றன.

கல்விக் குழுவினர், தங்களால் தெரிவிக்கப்பட்டுள்ள கல்வித் துறைச் சீரமைப்புப் பணியானது இருபது ஆண்டுகள் என்னும் கால அளவுக்குள் முடிக்கப்படவேண்டும் என்னும் விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர். எனவேதான் அவர்களுடைய கல்விச் சீரமைப்புத் திட்டம், இருபதாண்டுத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த இருபதாண்டுத் திட்டத்தின் ஏற்புடைய பகுதிகள் யாவும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே நம் ஆவல். குறிப்பாகவும் சிறப்பாகவும் ஆசிரியர்களின் ஊதிய உயர்வு பற்றிய பகுதி இந்த ஆண்டிலேயே நடைமுறை நாதமாக பாறினால், ஆசிரியர்களுக்கும் நன்மை விளையும்; நாட்டுக்கும் நலன் கிட்டும்.

கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி அமைப்பு

சென்னை அரசு ரூ. 50,000 மான்யம் வழங்கியுள்ளது

கல்கத்தா, ஏப் 10—கல்கத்தா பல்கலைக் கழகத்தில் வருகிற கல்வியாண்டிலிருந்து தமிழ் மொழிக்காக ஒரு நிரந்தர அமைப்பு நிறுவப்படுகிறது. இதற்காக சென்னை சர்க்கார் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000 வீதம் ஐந்தாண்டுகளுக்கு ரூ. 50,000 மானியம் வழங்கியிருக்கிறது.

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தார் கடந்த ஆறு ஆண்டுகளாக எடுத்துக் கொண்டுள்ள முயற்சியின் பலன் இது.

கல்கத்தாவில் உள்ள தமிழ் மாணவ, மாணவியர் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெறும் தேர்வுகளில் தமிழ் மொழியை பாடமாக எடுத்துக் கொண்டு தமிழ் பயில கல்லூரிகளில் போதிய வசதிகள் இல்லாதிருந்ததால் இதுகாறும் பாரதி தமிழ்ச் சங்கம் நடத்தி வந்த தமிழ் வகுப்புகளில் பயின்று வந்தார்கள். வருகிற கல்வியாண்டிலிருந்து பல்கலைக் கழகத்தில் ஏற்படுகிற அமைப்பின் மூலம் தமிழர்கள் எம். ஏ வகுப்பில் தமிழைப் பாடமாக எடுத்துப்படிக்க வசதி ஏற்படுகிறது.

கல்வித் துறைச் செய்திகள்

அரசாங்க உபகாரச் சம்பளத் திட்டங்கள்

சென்னை, ஏப். 11—படிப்பில் முதன்மையான மாணவர்கள் வறுமை காரணமாக படிப்பை இழந்து விடாமல் இருக்கச் செய்வதற்காக, அரசாங்கம் அநேக உபகாரச் சம்பளத் திட்டங்களை வகுத்துள்ளது. எஸ். எஸ். எல். ஸி. மெட்ரிகுலேஷன் சமதேர்வு பி. ஏ. பி. எஸ்ஸி., பி. காம்- பி. எஸ்ஸி (விவசாயம்) ஆகிய தேர்வுகளின் முடிவை யொட்டி தேசிய உபகாரச் சம்பளங்கள் அளிக்கப்படுகின்றன. முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் 60 சத விகிதம் மதிப்பெண்களுக்குக் குறைவில்லாமல் பெறும் மாணவர்கள் விண்ணப்பித்துக்கொள்ள தகுதிபெற்றவர்கள் ஆவர். மாணவருடைய பெற்றோரின் வருமானம் மாதம் ரூ. 1000க்கு மேற்பட்டால், உபகாரச் சம்பளம் கிடைக்காது. தேர்வுக் குழுக்கள் அளிக்கும் முதன்மையான மாணவர் பட்டியலிலிருந்து இந்திய அரசாங்கம் இத் திட்டத்திற்கு உரிய மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தேர்வுக்கான கல்வியைக் கற்ற அந்தந்தக் கல்வி நிலையத் தலைவர் மூலமாக தமிழ்நாடு உயர் கல்வித் துறை நெறியாளர் தகவலைத் தெரிவிப்பார்.

பிரைமரி, செகண்டரி பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்கு

பிரைமரி, செகண்டரி பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளில் முதன்மையான தகுதியுள்ளவர்களுக்கு எஸ். எஸ். எல். ஸி. மெட்ரிக்குலேஷன் சமதேர்வு, பி. யு. சி. இந்தியப் பள்ளிச் சான்றிதழ் ஆகிய தேர்வு முடிவுகளை ஒட்டி அவர்களின் உயர் படிப்புக்காக உபகாரச் சம்பளங்கள் அளிக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும இந்த உபகாரச்சம்பளத்திற்கான விண்ணப்பங்களை தமிழ் உயர் கல்வித் துறை நெறியாளர் பெற்றுக் கொள்வார். விண்ணப்ப பாரங்கள் அவரிடம் கிடைக்கும்.

கடன் உதவி

இந்தியாவிலுள்ள படிப்புகளுக்கு மட்டும் வட்டியில்லாத கடன் உதவிச் சம்பளங்கள் அளிக்கப்படுகின்றன. இதன்படி மெட்ரிக்குலேஷன் அல்லது பள்ளி இறுதி வகுப்புக்குப் பிறகு எல்லா முழு நேர படிப்புகளுக்கும், பயிற்சிக்கும் செகண்டரி கல்வி போர்டு, பல்கலைக் கழகங்கள் ஆகியவை நடத்தியதேர்வுகளின் முடிவுகளை ஒட்டி உதவிச்சம்பளங்கள் அளிக்கப்படும். இந்தத் தேர்வில் குறைந்த பட்சம் 50 சத விகிதமாவது மதிப்பெண்கள் பெற்று பெற்றோரின் வருமானம் மாதத்தில் ரூ. 6,000 க்கு அதிகப்படாதபடியும் உள்ள மாணவர்கள் உப

காரச்சம்பளத்திற்கு தகுதியுள்ளவர்களாவர். இத்திட்டத்தின்படி அளிக்கப்படும் கடன் தொகை அந்த மாணவர் சம்பாதிக்க ஆரம்பித்து ஓராண்டுக்குப் பிறகு திருப்பச் செலுத்தப்பட வேண்டும். உதவிச் சம்பளத்திற்கான விண்ணப்ப பாரங்களை உயர் கல்வித் துறை நெறியாளர், சென்னை-6 என்ற முகவரிக்கு எழுதியோ கல்லூரி முதல்வர்களிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி பயில்வதை ஊக்குவிப்பதற்காக எஸ். எஸ். எல். ஸி. மெட்ரிகுலேஷன் சமமான தேர்வு பி. யு. ஸி இண்டர்மீடியட் பி. ஏ. பி. எஸ்ஸி. எம். ஏ. (இந்தி) ஆகிய தேர்வுகளின் முடிவுகளை ஒட்டி இந்தி கல்லூரி படிப்புக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்ப பாரங்கள் உயர் கல்வித் துறை நெறியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இந்தத் திட்டங்களைப் பற்றி முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் தமிழ் நாடு அரசாங்க உயர் கல்வித் துறை நெறியாளர் அல்லது கல்லூரி முதல்வர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

கல்விக்கு ஒதுக்கீடு மிகக் குறைவு

செலவு விதிக்க மதிப்பீட்டுக் குழு ஆய்வுரை

புது டில்லி, ஏப். 26—மற்ற முற்போக்கான நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை மிகவும் குறைவாகும்.

சர்வகலாசாலை மானியக் கமிஷன் பற்றி மதிப்பீடுக் கமிட்டி சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இம்மாதிரி கூறப்பட்டுள்ளது. கமிட்டியின் அறிக்கை இன்று லோக சபையில் தாக்கல் செய்யப்பட்டது.

கமிட்டி தனது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:— கல்விக்கு இவ்வளவு குறைவாகச் செலவிடுவதானது நல்ல பிரஜை உணர்ச்சியோ அல்லது மனிதப் பண்புகளோ இல்லாத இளந்தலைமுறையினரைத் தோற்றுவிக்கக் கூடும்.

தேசிய வளர்ச்சி, சுபிட்சத்துடன் கல்வி நேரடித் தொடர்பு கொண்டிருப்பதால் எல்லா அளவுகளிலும் கல்வித் திட்டங்களுக்குப பண வசதி கிடைப்பதற்காக ஒரு கல்வி "செஸ்" (தீர்வை) விதிக்கலாம்.

நான்காவது திட்டத்தில் சர்வகலாசாலை மானியக் கமிஷனிடம் போதிய பணம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

கல்வித் தரத்தில் வித்தியாசம்

பணக்காரக் குழந்தைகளுக்குக் கிடைக்கும் கல்வியின் தரத்திலும் மற்றவர்களுக்கும் கிடைக்கும் கல்வியின் தரத்திலும் வித்தியாசம் இருப்பதால் இந்தியாவில் ஒருவித வகுப்புப் பாகுபாடு உருவாகி வருவது பற்றி கமிட்டி வேதனையடைகிறது.

மனதில் பதியக் கூடிய வயதில் இந்தப் பாகுபாடானது இரு பிரிவினரின் மன வளர்ச்சியையும் பாதிக்கக் கூடும். பணக்காரக் குழந்தைகளிடம் தாங்கள் தான் உயர்வானவர்கள் என்றஎண்ணம் உருவாகி அகம்பாவப் போக்கு வளரக் கூடும். தங்களுக்கு உரியது கிடைக்கவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டு ஏழை மாணவர்களிடம் எதிர்க்கும் போக்கு வளரக் கூடும்.

பணக்காரக் குழந்தைகளுக்கும் ஏழைக் குழந்தைகளுக்கும் கிடைக்கக் கூடிய கல்வியில் பரந்த ஏற்றத்தாழ்வு நீக்கப்பட வேண்டும்.

இந்தியா போன்ற ஒரு ஏழை நாட்டில் கல்வி பெறுவது அதிக செலவுள்ளதாக்கப்படக் கூடாது. எல்லோருக்கும் எளிதில் கிட்டுவதாயிருக்க வேண்டும்.

மாணவர்களிடையே கட்டுப்பாடின்மை

இந்திய சர்வகலாசாலைகளில் எல்லா அளவுகளிலும், குறிப்பாக இளந்தலை முறையினரிடையே கட்டுப்பாடின்மை காணப்படுகிறது.

புதிய சமூகப் பண்புகளை உருவாக்காமலேயே லட்சியப் பற்று இல்லாமையும் பாரம்பரிய சமூகப் பண்புகளில் மதிப்பில்லாமையுமே இதற்குப் பெரிதும் காரணமாகும்.

கட்டுப்பாடின்மை வளர்ந்திருப்பதற்கு அரசியலும் அரசியல்வாதிகளுமே பெரிதும் காரணமாவர். அடிக்கடி அரசியல் காரணங்களுக்காக மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர். தங்களுடைய குறைகளுக்குப் பரிகாரம் காண்பதற்காக அதிகாரிகளை மீறி வன்முறைச் செயல்களில் இறங்கும்படி மாணவர்கள் தூண்டப்படுகின்றனர்.

சூழ்நிலைகள் தான் மாணவர்களின் போக்கை உருவாக்குகிறது. சட்ட ஆட்சி, நல்ல நடத்தை, குறைகளுக்குப் பரிகாரம் காண அரசியல் சட்ட முறைகளைக் கையாள்வது ஆகியவற்றிற்கு மதிப்பு கொடுக்கும் விஷயத்தில் ஒரு சிறந்த பணியை ஏற்படுத்த வேண்டியது முதியவர்கள் தான்.

எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி

யூனியன் துணையமைச்சர் விருப்பம்

ஆரம்பக் கல்வி பற்றித் தேசியக் கருத்தரங்கு

கோடைக்கானல் ஏப், 25—நாலாவது திட்டகாலத்தில் ஆறு முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகள் யாவரையும் பள்ளிக்கூடத்தில் சேர்க்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று யூனியன் உதவி கல்வி மந்திரி சௌந்திரம் ராமச்சந்திரன் கூறினார்.

ஆரம்பக்கல்வி பற்றிய 6 வது தேசிய கருத்தரங்குக்கு அவர் தலைமை வகித்துப் பேசினார். நாலாவது திட்டம் ஆரம்பமாகிறது என்றும், எனவே 6 முதல்

11 வயது வரையுள்ள குழந்தைகள் யாவரையும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஆலோசிக்க வேண்டும் என்றும் கூறினார்.

விஞ்ஞான போதனைக்கு விசேஷ முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும், இப்போது பிரைமரி, மிடில் பள்ளிகளின் ஆசிரியர்களின் திறமையின்மை, தக்க பாடப் புத்தகங்கள் இல்லாமை, பழங்கால பாடத் திட்டங்கள், நவீன கருவிகள் இல்லாமை ஆகிய பல காரணங்களினால், விஞ்ஞானக் கல்வி போதனை பயனற்றதாக இருக்கிறது என்றும் அவர் கூறினார். ஆசிரியர்களுக்கு நாடு பூராவிலும் ஒரே மாதிரியான பயிற்சியளிப்பதற்கு ஒரு பொதுத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றும் அவர் விரும்பினார். ஆதார பள்ளிகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும், சில அபிவிருத்திகளுக்காக நாலாவது திட்டத்தில் சுமார் ரூ. ஏழரை கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

கல்வித்துறையில் சென்னையின் சாதனைகளை அவர் பாராட்டிப் பேசினார். மூன்றாவது திட்ட முடிவை, இந்த ராஜ்யத்தில் 65 லட்சம் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். செகண்டரி, கல்வி முடிவு வரையில் இந்த ராஜ்யத்தில் கல்வி இலவசமாகப் போதிக்கப்படுகிறது என்றும், இதெல்லாம் போற்றத்தக்கதாகும் என்றும் அவர் கூறினார்.

கருத்தரங்கை ஆரம்பித்து வைத்த சென்னை முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் நாலாவது திட்டத்தில் கல்வி திட்டங்களுக்காக 1260 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், நாலாவது திட்டக் காலத்தில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

கல்வியைப் பெரும் அளவில் பரப்பினால் தரம் இருக்காது என்ற கருத்து தவறானது என்றும் அவர் கூறினார்.

ஆரம்பப் பள்ளியிலிருந்தே விஞ்ஞானம் போதிக்கப்பட வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்.

வேண்டும் போது மழை

✲

பல நாடுகளில் செயற்கை முறையில் மழை பெய்யச் செய்யப் பல பரீட்சைகள் நடக்கின்றன. அவை எவ்வளவு தூரம் வெற்றி தந்திருக்கின்றன. அவற்றால் இன்று முழுப் பலன் கிடைக்குமா என்ற விவரங்களை விளக்குவது இந்தக் கட்டுரை.

மழையை மனிதன் இஷ்டப்படி தூண்டிவிட்டுப் பெய்யச் செய்யச் சமீப வருஷங்களில் மிக விரிவான பரீட்சைகள் நடந்திருக்கின்றன. இவ்விதம் எத்தனையோ பரீட்சைகள் நடந்திருந்தாலும், அப்பழுக்கில்லாத முறை எதுவும் இதுவரைக்கும் உருவாகவில்லை. மழை இல்லாத இடங்களில் மழைப் பஞ்சம் இன்னமும் தான் தீரவில்லை; வறண்ட இடங்களில் வறட்சி நீங்க வழி ஏற்படவில்லை.

மழை பெய்யச் செய்யத் தூண்டிவிடுவதில் பல சிரமங்கள் இருப்பது இப்போது நன்றாய் ருசுவாகிவிட்டது. மழை பெய்யத் தூண்டுவதென்றால், முதலில் மேகம் வேண்டும். மேகத்தை மனிதன் உண்டாக்கிவிட முடியாது. மேகங்களில் பல வகைகள் இருக்கின்றன. மெல்லிசாகவும் ஆவிப் படலங்களாகவும் உள்ள மேகங்கள் இயற்கையாகவோ செற்கையாகவோ மழை பெய்ய மாட்டா. இந்த மாதிரி மேகங்களையும் கொளுத்தும் வெய்யிலையுந்தான் பாலைவனங்களில் காணலாம். பாலைவனங்களுக்குத்தான் மழை மிகவும் தேவை. அங்கே மழை பெய்யும்படி செய்ய வழியே கிடையாது.

கோபுரம் போல் தடித்துப் பிதுங்கியவை 'க்யூமுலஸ் க்ளவுட்ஸ்' என்ற மேகங்கள். இடியும் புயலும் இந்த மேகங்களோடு தான் வரும். செயற்கை முறை மூலம் மழை பொழியச் செய்ய இந்த மேகங்களில் நடத்திய பரீட்சைகள் மட்டுமே வெற்றி தந்திருக்கின்றன. தேவையான ஓர் இடத்தில பெய்யாமல், பயனற்ற வேறு இடத்துக்கு இந்த வகை மேகங்கள் ஓடிப்போய் விடுவதுண்டு. அப்படி இவை ஓடாமல், வேண்டிய இடத்தில் பெய்து பயன் தரச் செய்யலாம். ஆனால் அதில் ஏற்படும் செலவை ஏற்றுக்கொள்ள மக்கள் சம்மதிக்க வேண்டும்.

புயல் மேகங்கள் சாமாகப் பெய்யப் போகிற நேரத்துக்கு முன்பே அவை பெய்யும்படியும் செய்யலாம்.

இயற்கையாக மழை எப்படிப் பெய்கிறது? அதைப்பற்றி இரண்டு கொள்கைகள் உண்டு. பூமியின் வடக்கு அல்லது தெற்குப் பக்கமாக மித உஷ்ணமுள்ள பிரதேசங்களைப்பற்றியது முதல்

கொள்கை. இங்கே உள்ள மேகங்கள் மழை பெய்ய ஆரம்பிக்கும் போது, அந்த மேகங்களின் குளிர்ந்த மேல் பகுதியில் நுண்மையான பனிப் படிகங்கள் (ஐஸ் க்ரிஸ்டல்ஸ்) உண்டாகின்றன. சில சமயம் இந்தப் படிகங்கள் போதிய அளவு இருப்பதில்லை. அப்போது செயற்கைப் பனிப் படிகங்களை அதற்றில் புகுத்தினால் மழை பெய்யும். இப்படிச் செயற்கைப் பனிப் படிகங்களைப் புகுத்திப் பல பரீட்சைகள் நடந்திருக்கின்றன.

'ட்ரை ஐஸ்' என்ற கெட்டியான 'கார்பன் டை யாக்ஸைடு' கட்டிகளை மேகங்களில் தெளிப்பதுண்டு. இதுதான் பெரிதும் பிரபலமான ஒரு வழி. இந்த 'ட்ரை ஐஸ்' கட்டிகள் மேகங்களுக்கிடையிலே விழும்போது, இவை விழும் சுவட்டிலே மிகக் குளிர்ந்த காற்றுத் தோன்றுகிறது. அதனால் பனிப் படிகங்கள் தாமாக உருவாகின்றன. இன்னொரு வழியும் உண்டு. 'ஸில்வர் அயொடைடு' என்ற ரசாயனப் பொருளின் நுட்பமான படிகங்களை மேகங்களில் புகுத்துவார்கள். இந்தப் படிகங்கள் உருவிலும் அமைப்பிலும் பனிப்படிகங்கள் போலவே இருப்பதுடன், சில நிலைமைகளில் அவை போலவே செயலும் ஆற்றுகின்றன. இவற்றை உற்பத்தி செய்யும் கருவிகளை வைத்துப் புகையாக இந்த 'ஸில்வர் அயொடைடு' படிகங்களை மேகங்களுக்கு அனுப்பலாம்; அல்லது விமானங்களில் இவற்றைச் சுமந்து சென்று மேகங்களில் புகுத்தலாம்.

நிலம் எவ்வளவுதான் வளம் உள்ளதாக இருந்தாலும், மழையாவது பெய்யவேண்டும்; பாய்ச்சலாதாரமாவது இருக்க வேண்டும். இரண்டும் இல்லாவிட்டால், அந்த நிலத்தால் ஒரு பயனும் இல்லை. பல்லாயிரம் ஆண்டுகளாய் மனிதர்களுக்கு மழைப்பஞ்சம் என்றால் பயம். பழங்கால மக்களெல்லாம் மழையைத் தருவிக்கப் பல சடங்குகள் நடத்தினார்கள். அவர்களுடைய புராணங்களில் எல்லாம மழைக் கடவுள் உண்டு. புராதன கிரீஸ், ரோம் இரண்டிலும் ஜ்யூஸ் அல்லது வியாழனை மழைக்கும் பூமியின் வளத்துக்கும் கடவுளாக மதித்தார்கள். இடியும் மின்னலும் அவருடைய ஆயுதங்கள். அநேக நாடுகளில் பாம்பு, சர்ப்பம், 'டிரேகன்' என்ற ராட்சசப் பாம்பு இவற்றை மழையோடு சம்பந்தப் படுத்தியிருக்கிறார்கள். சீனர்களின் டிரேகன் தண்ணீரையே உருவாகக் கொண்டது. இந்தியாவிலும் கிழக்காசியா எங்கும் நாகராஜனைக் கடவுளாக வணங்குகிறார்கள்.

புராதன ஹீப்ரு ஜாதியினர் மழையைக் கடவுளின் அருள் என்று மதித்தார்கள். அறம் பிறழாமல் நாம் நடந்தால், மழை பெய்யும் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

"மஞ்சரி"

சிறைவாழ்வைத் திருத்திய சேல்விழியாள்

மா. இளஞ்செழியன், எம். ஏ.,
(பொருளியல் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி)

"நாடகம் பார்க்கப் போகலாமா எலிசபெத்?"

"வேண்டாம்."

"நடன அரங்கத்திற்குச் செல்வோமா?"

"தேவையில்லை."

'இன்னிசை பாடி மகிழ்வோமா?'

"அதுவும் வேண்டாம்."

"செஸ் ஆடலாமா?"

"எனக்குப் பிடிக்கவில்லை."

"பூப்பந்து ஆடுவோமா?"

"நான் வரவில்லை; நீங்கள் வேண்டுமானால் ஆடுங்கள்."

"உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கான எந்தத் திட்டத்தைக் கூறினாலும் வேண்டாம் என்கிறாய். உனக்கு எந்த ஆட்டம்தான் பிடிக்கும்? அதைக்கூறு; அதையே ஆடுவோம்."

"அன்பு கூர்ந்து என்னை மன்னித்து விடுங்கள். நாடகம்—நடனம், ஆட்டம்-பாட்டம், இன்னிசை-கேளிக்கை எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை."

ஆண்களும் பெண்களுமாகப் பதினொருபேர் உடன் பிறந்தவர்கள் அந்த மங்கைக்கு. அவர்கள் அத்தனை பேரும் ஒன்றுதிரண்டு, அவள் அருகே நின்று, ஏதேனும் ஒரு பொழுது போக்கில் கலந்து கொள்ளும்படி அவளை அன்போடும் ஆர்வத்தோடும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்கள். எலிசபெத் என்னும் அந்த அணங்கோ முடியாது என்று திட்டவட்டமாக மறுத்து விடுகிறாள்.

அன்றலர்ந்த செந்தாமரை போல அழகை அள்ளி வீசிக் கொண்டிருக்கும் பருவம் அவளுக்கு. பதினாறு வயதே நிரம்பிய பூங்கொடி அவள். ஆசைக் கனவுகளை அலை அலையாக எழுப்பி, தன் உள்ளம் எனும் படகை அந்த அலைகளின்மீது அசைய விட்டு, அது அசைந்து அசைந்து ஆடுவதைக் கண்டு, எந்தப் பெண்ணும் களிப்பு மிகக் கொண்டு துள்ளி விளையாடும் வயது அது. ஆனால், எலிசபெத்துக்கோ அத்தகைய எண்ணம் துளியும் எழவில்லை. நாளுக்கு ஒரு விதமாக உடை உடுத்துப் பார்க்க வேண்டும்—வேளைக்கு ஒரு வகையாக அணிகலன் பூட்டிக்கொள்ள வேண்டும்—புதிய புதிய முறைகளில் தலையை அழகுபடுத்திக் கொள்ளவேண்டும் — என்றெல்லாம் பெண்கள் இயல்பாகவே ஆசைப்படும் பருவம் அது. ஆனால் எலிசபெத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆசைகளில்

எதுவும் அவளைத் தீண்ட முடிய வில்லை.

வறுமைத்தேளால் கொட்டப் பட்டு வேதனைத் தீயில் வெந்து கொண்டிருக்கும் பரிதாபக் குடும் பத்தில் பிறந்தவள் அல்ல அவள். செல்வச் செவிலியால் தாலாட் டப்படும், இன்ப வாழ்வு எனும் தொட்டிலில், ஆநந்தமாக ஆடிக் கொண்டிருந்த பணக்காரக் குடும் பம் அவளுடையது. வீடுவாசல் நிலம் நீர், தோட்டம் துறவு, ஆள் அம்பு—அத்தனை வசதிகளை யும் குறைவறப் பெற்று, சித்தம் மிகக் களித்துச் சிங்காரப் பண் பாடிக் கொண்டிருந்த குடும்பத் தின் செல்வ மங்கையாகப் பிறந் தவள் எலிசபெத் என்ற போதி லும், அவளுடைய உள்ளம் உல் லாச வாழ்வை நாடவில்லை.

வில்லியம் சேவரி என்னும் பாதிரியார் ஒருவருடைய சொற் பொழிவை ஒருநாள் அவள் கேட்க நேர்ந்தது. அந்தச் சொற் பொழிவு, அவளுடைய உள்ளத் தை—உள்ளத்து ஆசைகளை— ஆசைகளின் நோக்கத்தை—அத் தனையையும் மாற்றி அமைத்து விட்டது. எல்லோரையும் போல உல்லாச வாழ்வு வாழ்வதிலோ, ஆடிப்பாடிக் களிப்பதிலோ பய னில்லை; மனித சமுதாயத்திற்கு உண்மையிலேயே பயன்தரத்தக்க உருவான பணி எதையாவது செய்தாக வேண்டும் என்கிற உறுதி அவளுக்கு ஏற்பட்டு விட் டது. எந்தப் பணியை மேற் கொண்டால் மக்கட் சமுதாயத் திற்கு மாண்புமிக்க நலன் கிடைக்கும்—அந்தத் தொண்டு தன்னுடைய அறிவுக்கும் ஆற்ற லுக்கும் பொருத்தமாக இருக் கும்—எந்த அரும்பணியை எவ் வாறு நடத்துவது என்பனவற் றைப் பற்றியெல்லாம்சிந்திப்பது, சீர் தூக்கிப் பார்ப்பதுமே அவ ளுடைய நேரம் முழுவதையும் கவர்ந்து விட்டது.

அழகுக் கவர்ச்சியும் செல்வச் செழிப்பும் மிகுந்த ஓர் இளமைப் பருவம் இத்தகைய எண்ணங் களில் ஈடுபட்டு வீணாகிவிடுவது முறையாகாது என்று கருதிய அவளுடைய தந்தையும் உடன் பிறந்தோரும், இத்தகைய நோக் கங்களிலிருந்து அவளை விடுதலை செய்யத் தங்களால் இயன்றவரை முயன்று பார்த்தனர். ஆனால் அம் முயற்சி, முழுத்தோல்வி என்னும் முடிவையே தொடர்ச் சியாகப் பெறலாயிற்று.

நிறைந்த செல்வத்தால் சூழப் பட்டிருந்த போதிலும் உயர்ந்த பண்புகளின் உறைவிடமாகவும் திகழ்ந்த ஜோசப் பிரை என்னும் ஓர் இளைஞர், எலிசபெத்தின் அடக்கமான அழகையும் அறி வார்ந்த வாழ்க்கையையும் கண்டு, தன் உள்ளத்தையும்வாழ்க்கையை யும் அவளுக்குப் பரிசாகத் தந்து விட விரும்பினார். இவர்கள் இரு வருக்கும் இடையே காதல் முகிழ்த்துத் திருமணமாக மலர்ந்து, சிறந்த ஒரு குடும்ப மாக ஒளிவீசித் திகழ வேண்டும் என்கிற பேவரால், எலிசபெத் தின் தந்தைக்கும் இருந்தது. ஆனால் எலிசபெத்துக்கோ,

காதல்-திருமணம்-குடும்பம் என்கிற இந்தக் கட்டுப்பாட்டுக்குள் சிக்கிய கூண்டுக் கிளியாகத்தான் மாறிவிட்டால், சமுதாயத் தொண்டு புரிவதற்கான வாய்ப்பு இல்லாமற் போய்விடும் என்கிற அச்சம் ஏற்பட்டு விட்டது அந்த அச்சத்தின் விளைவாக, அச் செல்வியார் நீண்ட நாட்கள், ஜோசப்பின் காதலையும் ஏற்க வில்லை; திருமண ஏற்பாட்டிற்கும் ஒப்புதல் தரவில்லை. பல மாதங்கள் உருண்டு ஓடியபின்னர் தந்தையின் அன்புப் பிடிவாதம்—உடன் பிறந்தாரின் ஆசைக் கெஞ்சல்—உறவினரின் வேண்டுகோள்—இத்தனையையும் புறக் கணித்தல் முறையாகாது என்கிற எண்ணத்தின் பயனாகத் திருமணத்திற்கு அம்மங்கை நல்லாள் இசைவு தந்தாள். ஆனால் அந்த ஒப்புதலும் மிக முக்கியமானஒரு நிபந்தனையோடுதான் தரப்பட்டது. சமுதாயத் தொண்டு புரிவதில் தனக்கு உள்ள தணியாத ஆர்வத்திற்குக் குறுக்கே, திருமணத்திற்குப் பின்னரும், எத்தகைய தடைச் சுவரும் எழுப்பப் படல் ஆகாது என்பதே அந்த நிபந்தனை. திருமணம் நடைபெற்ற போது எலிசபெத்தின் வயது இருபது.

எலிசபெத் பிறந்த குடும்பத்தைப் போலவே புகுந்த குடும்பமும் செல்வச் செழிப்பில் நீந்தி விளையாடிய குடும்பமாகத் திகழ்ந்த போதிலும், எலிசபெத்தின் நெஞ்சத்திலும் சரி, வாழ்க்கையிலும் சரி, ஆடம்பரப் போக்கும் பகட்டு உணர்ச்சியும் இடம் பெறமுடியவில்லை. செல்வ மிகுதியால் ஏற்படும் செருக்கும் இறுமாப்பும் அந்த அம்மையாரின் அருகே வரக்கூட அஞ்சி ஒதுங்கி நின்றுவிட்டன. திருமணத்திற்குப் பின்னர், எலிசபெத், அன்னாரின் கணவருடன், இலண்டன் மாநகரில் வாழ்க்கையை நடத்தினார் என்ற போதிலும், அந்தப் பெருநகரத்து உல்லாச வாழ்க்கையிலும் கேளிக்கை விளையாட்டிலும் அவர் சிக்கிவிட வில்லை. அந்த அம்மையாரின் இதயத்தைக் கவர்ந்த இலட்சிய கீதம்-சமுதாயத் தொண்டில் பெரியதொரு பங்கேற்க வேண்டும் என்கிற பேரார்வம், திருமணத்தின் விளைவாகமங்கவில்லை; மறையவில்லை; அதற்கு மாறாக முன்னிலும் பல மடங்காகப் பெருகி ஒளிவீசலாயிற்று.

எலிசபெத் பிறைக்கு அடுத்தடுத்துப் பல குழந்தைச் செல்வங்கள் பிறந்தன; குடும்பத்தின் அளவு பெருகிற்று. அதன் விளைவாகக் குடும்பப் பொறுப்புகளும் கடமைகளும் வளர்ந்தன. ஆனால் இந்தக் கடமைகளின் சுமையால் உள்ளம் தகர்ந்து, பொதுநல உணர்ச்சியை இழந்து, குடும்பப் பெண் என்கிற அந்த அளவோடு தன்னுடைய வாழ்க்கையைச் சுருக்கிக்கொள்கிற போக்கு எலிசபெத்துக்கு ஏற்படவில்லை. சுற்றிச் சூழும் முகிற் கூட்டங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு முழுமதி பவனி வருவதுபோல, வளர்ந்து பெருகிய குடும்பப் பொறுப்புக்

களுக்கு இடையேயும் அந்த அம்மையாரின் பொதுத் தொண்டு, சீரும் சிறப்பும் செறிந்த வகையில் பயனும் பண்பும் மிகுந்த முறையில் தொடர்ந்து நடைபெறலாயிற்று.

காசு கொடுத்துக் கல்வியின் ஒளியைப் பெறமுடியாத காரணத்தால் அறியாமை இருளில் ஆழ்ந்து கிடந்த ஏழைப் பிள்ளைகளுக்கு எழுத்தறிவிப்பதற்காக இலவசப் பள்ளிக்கூடங்கள் பலவற்றை நிறுவி நடத்துதல், அங்குள்ள ஆசிரியப்பெருமக்களோடு அவ்வப்போது தானும் கலந்துகொண்டு பாடங்களை நடத்துதல், கொட்டும் பனி, வாட்டும் குளிர் ஆகியவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தேவையான உடைகள்கூட இல்லாமல் அல்லல் உற்றுத் தவிக்கும் ஏழைமக்களுக்கு அவற்றை விலையின்றி அளித்தல், மருந்துப் பொருள்கள்—உணவுப் பண்டங்கள் முதலியவற்றை வறியவர்கட்கு வழங்குவதற்கு உரிய நிறுவனங்களை அமைத்தல், அம்மை நோய் பரவாமல் இருப்பதற்காகப் பற்பலவட்டாரங்களுக்கும் சென்று, ஆங்காங்கு உள்ளஏழை எளியவர் கட்குத் தடுப்பு ஊசி குத்துதல், பாமர மக்களின் கூட்டங்களைக் கூட்டி, அவர்களுடைய வாழ்க்கையில் நெளிந்துகிடக்கிற தீய பழக்க வழக்கங்களை அகற்றிப் பழுதற்ற நல்வாழ்வு வாழ வேண்டியதன் இன்றியமையாமையை விளக்கிக் கூறும் சொற்பொழிவுகள் ஆற்றுதல்—இந்த அரிய பணிகளிலும், இவற்றைப் போன்ற பிற உயர்ந்த தொண்டுகளிலும். எலிச பத் பிரை முழுமூச்சோடு ஈடுபடலானார். பல்வேறு துறைகளிலும் முறைகளிலும அவர் ஆற்றிய இப்பணிகளின் விளைவாக, அவர் வாழ்ந்துவந்த இலண்டன் நகரில் மட்டுமல்லாமல், அவரைப் பெற்று அவனிக்கு அளித்த இங்கிலாந்து நாடு முழுவதிலும், அவருடைய பெயர், பூரிப்போடும் பெருமையோடும் ஒலிக்கப்படலாயிற்று. ஒருநாளும் புகழை அவர் தேடி ஓடியதில்லை என்ற போதிலும், பெரும்புகழ், தானாகவே அவரை நாடிவந்து அவர் காலடியில் தஞ்சம் புகுந்தது.

எலிசபெத் பிரை ஆற்றிவந்த அரும் பணிகளின் விளைவாகப் பெரும் புகழ் அவருக்குக்கிடைத்தது என்ற போதிலும் அந்தப் புகழ் ஒளி கண்டு அவர் மயங்கி விடவில்லை. பிறரெல்லாம் அவருடைய பணிகளை ஏற்றிப் போற்றிப் புகழ்ந்தனர். ஆனால்அவரைப் பொறுத்த வரையில், தான் ஆற்றி வந்த பணிகள் மிக எளியவை என்றே அவர் கருதினார். இவற்றையெல்லாம் விட மிக முக்கியமான—மிகச் சிறந்த ஒரு பணியைத் தான் செய்தாகவேண்டும் என்கிற பேரார்வம் அவருடைய உள்ளத்தை அல்லும் பகலும் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது. அந்த ஆர்வம் நிறைவேறுகிற நன்னாள் — பின்னர் என்றென்றும் எண்ணி மகிழத் தக்க பொன்னாள் என்று வரும்

என்று துடிதுடித்துக் கொண்டிருந்தார் அவர்.

அந்த நாளும் வந்தது, 1813-ஆம் ஆண்டில் — எலிசபெத்துக்கு வயது 33 நடந்து கொண்டிருந்த போது.

அந்த ஆண்டில் ஒரு நாள், நியூகேட் என்னும் இடத்தில் இருந்த சிறைச்சாலையைப் பார்வையிட அவர் சென்றார். அவர் அப்படிச் சென்றது, ஏதோ சென்றார் — எதையோ கண்டார் — வீட்டிற்குத் திரும்பினார் என்று சொல்லத்தக்க ஒரு சிறிய வாக்கியத்தோடு முடிந்து விடவில்லை. உலக வரலாற்றில் என்றென்றும் அழிய முடியாத ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது அந்த நிகழ்ச்சி. சிறைச்சாலைகளைச் சீர்திருத்தி அமைப்பதைப்பற்றி, இனி, உலகத்தில் யார் எங்கே எந்த நூற்றாண்டில் பேசினாலும் அல்லது எழுதினாலும், நியூகேட் சிறைச்சாலைக்கு எலிசபெத் சென்றதையும் அவர் அங்கே நிகழ்த்திக் காட்டிய அற்புதச் செயலையும் குறிப்பிடாமல் அந்தப் பேச்சு அல்லது எழுத்து முழுமை உடையதாக ஆகாது என்கிற நிலையை, அந்த ஒரு நாள் நிகழ்ச்சி உருவாக்கி விட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், இங்கிலாந்திலும் சரி, ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் சரி, சிறைச்சாலைகள், குற்றவாளிகளைத் திருத்துவதற்கு உரிய அமைப்புகளாக இருக்கவில்லை; ஈவு இரக்கமற்ற கொடுமையின் கூடாரங்களாக விளங்கின. அந்தக் காலத்தில் சிறைக் கைதிகளை நடத்திய முறையில் இந்தக் காலத்தில் ஆடு மாடுகளை நடத்தினால்கூட மக்கள் மன்றத்தில் கொதிப்புணர்ச்சியும் கொந்தளிப்பும் தாண்டவம் ஆடும்; அவ்வளவு இதயமற்ற முறையில் கைதிகள் நடத்தப் பட்டார்கள். அந்தக் காலத்துச் சிறைச்சாலைகள் என்று அழைப்பதைவிடச் சித்திரவதைக் கூடங்கள் என்று அழைத்தால்தான் பொருத்தமாக இருக்கும். ஆண்களும், பெண்களும் கொலைகாரர்களும் பைத்தியக்காரர்களும், கொள்ளைக்காரர்களும் கடனைச் செலுத்தத் தவறியவர்களும், பெரியவர்களும் குழந்தைகளும் எத்தகைய பாகுபாடும் இன்றி ஒரே இடத்தில் கும்பல்கும்பலாக அடைத்து வைக்கப் பட்டிருந்தார்கள். காற்றோ ஒளியோ உள்ளே நுழையமுடியாத வகையில் சிறைகள் அமைக்கப் பட்டிருந்தன. இருட் குகைகள் என்று அவற்றைக் குறிப்பிட்டால், அது வெறும் இகழ்ச்சியன்று; எழுத்துக்கு எழுத்து உண்மை. பணம் கொடுக்கக்கூடிய கைதிகளுக்குக் குடிவகைகள் மிகத் தாராளமாக வழங்கப்பட்டன. உணவோ மிகச் சிறு அளவில்தான் தரப்பட்டு வந்தது. போதிய உணவைப்பெற முடியாத காரணத்தாலும் துப்புரவு அற்ற சூழ்நிலையின் பயனாக ஏற்பட்ட வெறுக்கத்தக்க பல நோய்களாலும் நூற்றுக்கணக்கான கைதிகள் இறந்து விட்டார்கள். அயர்லாந்தில் இருந்த சிறை ஒன்றில் ஒருமுறை தீப்பற்றிக்

கொண்டபோது, அச்சிறையில் இருந்த ஐம்பத்து நான்கு கைதிகள் நெருப்பின் பிழம்புகளுக்கு இரையாகி அலறித் துடித்த போது அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்ச்சி யாருக்குமே ஏற்படவில்லை.

இத்தகைய பயங்கரமான சூழ்நிலையின் விளைவாகச் சிறைக் கைதிகள் மனித உணர்ச்சிகள் அத்தனையையும் இழந்து, ஏறத்தாழ விலங்குகளைப் போல வாழ்ந்து வந்தார்கள். வாழ்ந்து வந்தார்களா — தவறு தவறு — சீறிப் பாயும் சிறுத்தைகளைப் போல் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டு, வெறுக்கத்தக்க பாடல்களைப் பாடிக்கொண்டும் தீய சொற்களை ஒருவர் மீது ஒருவர் வீசிக்கொண்டும், அரை நிர்வாண நிலையில் நாட்களை விழுங்கிக்கொண்டுமிருந்தார்கள்.

தங்களை நெருங்கி வருகிற யாரையும் வெறிகொண்ட விலங்குகளைப்போல் பயந்து தாக்குகிற அளவுக்கு அவர்களுடைய இதயங்கள் இறுகி விட்டிருந்த காரணத்தால், சிறைக் காவலர்கள் கூட எளிதில் அவர்களை நெருங்கத் துணிவதில்லை. இத்தகைய சூழ்நிலையில்தான் இத்தகைய பயங்கர மனிதர்களைத் திருத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு, முப்பத்து மூன்று வயது நிரம்பிய எலிசபெத், நியூகேட் சிறைச்சாலைக்குள் நுழைந்தார். சிறைக் காவலர்களும் நெருங்க நடுங்கும் கைதிகளுக்கு இடையே, இந்த அம்மையார், தன்னந்தனியாகச் செல்கிறாரே — எத்தகைய ஆயுதங்களையும் ஏந்தாமல்! வெறும் கையோடு போகிறாரே — என்ன ஆகுமோ இவருடைய கதி என்று எண்ணி நடுங்கினர் அனைவரும். வேண்டாம் அம்மா இந்த விபரீத ஆசை என்று தங்களால் இயன்றவரை தடுத்தும் பார்த்தனர். கேட்கவில்லை எலிசபெத். தைரியமாக உள்ளே நுழைந்து விட்டார்.

ஏறத்தாழ முன்னூறு கைதிகள் இருந்தார்கள், அங்கே, தங்களை நோக்கி ஓர் அம்மையார், தன்னந்தனியே, புன்முறுவல் பூத்த முகத்தோடு, கம்பீரம் நிறைந்த தோற்றத்தோடு, அன்பு கலந்த அமைதியோடு வருவதைக் கண்டதும், முதலில் சற்றே ஒதுங்கி நின்றனர் கைதிகள். ஆனால் அடுத்த கணமே தனித்து வரும் ஆட்டின் மீது பாயவரும் வேங்கைகளைப் போல் அவர்கள் அனைவரும் அந்த அம்மையாரை நோக்கி ஓடி வந்தார்கள்.

அஞ்சாத நெஞ்சுபடைத்த அடலேறுகளைக் கூடக் கலங்க வைக்கும் நிலைமை இது. ஆனால் துளியளவும் அஞ்சவில்லை அம்மையார். ஒரு மூலையில் அக்கைதிகளில் ஒருவருடைய குழந்தை அலங்கோலமான நிலையில் மண்ணில் புரண்டு கொண்டிருப்பதைக் கண்டார். உடனே பாய்ந்து சென்று, அன்போடு அந்த அழுக்குக் குழந்தையை எடுத்து. ஆசையோடு அதனை அணைத்துக்கொண்டு மிகவும் இனிய குரலில், "உங்களிற் பலர்

தாய்மார்களாக இருக்கிறீர்கள். நானும் ஒரு தாய்தான். குழந்தைகளைக் காப்பாற்றி வளர்க்கவேண்டியது தாய்மார்களாகிய நம் கடமை அல்லவா? இக் குழந்தைகளும் எதிர்காலத்தில் கைதிகளாக மாறி மடியவேண்டியது தானா” என்று பேசத்தொடங்கி, அவர்களின் குழந்தைகளுக்கு நல்வாழ்வை அளிக்கவேண்டிய தன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டினார். அவருடைய இன்சொற்களைக் கேட்ட அக்கைதிகளின் கல்நெஞ்சங்களும் கரைந்து உருகலாயின. பலர் கண்ணீர் விட்டுக் கதறி அழலாயினர். அனைவரும் வந்து, முழந்தாள் இட்டு வணங்கி நின்று, தத்தம் சோக வரலாறுகளையெல்லாம் அவரிடம் அடுக்கடுக்காக எடுத்துக் கூறலாயினர். அவர்களுடைய சொற்களையெல்லாம் பொறுமையோடு செவிமடுத்த அம்மையார், அவர்கள் அனைவரும் திருந்திய நல்வாழ்வைத் தொடங்க முடியும் என்கிற புதிய நம்பிக்கையை அவர்களுக்கு அளித்தார். அத்தகைய புது வாழ்வின் தொடக்கத்திற்கும் என்னால் இயன்ற பணியை ஆற்றுவதற்காகவே தான் வந்திருப்பதாகவும், அத்தகைய பணியாற்றுவதே தன் தலையாய குறிக்கோள் என்பதாகவும் எடுத்து விளக்கினார்.

எலிசபெத்பிரை, அந்தச் சிறைச்சாலைக்குள் நுழைந்தபோது வெறிகொண்ட விலங்குகளாகக் காட்சி அளித்த கைதிகள், நெடு நேரத்துக்குப் பின்னர் அவர் அங்கிருந்து அகன்ற போது, அன்பும் பண்பும் நிறைந்த புதிய மனிதர்களாக மாறிவிட்டிருந்தார்கள்.

அடுத்த நாள் முதல், அக்கைதிகளின் வாழ்க்கையில் புதிய ஒளியைப் பாய்ச்சுவதற்காக, பன்னிரண்டு பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துக்கொண்டு, அல்லும் பகலும் அரும்பாடு பட்டார் எலிசபெத். அத்தகைய பணியின் பயனாக, நியூகேட் சிறைச்சாலை, கட்டுப்பாடற்ற வெறியர்களின் கூடாரமாக இருந்தநிலை மாறி, ஒழுங்கு முறையோடு கூடிய ஒரு சிறந்த குடும்பமாகக் காட்சி அளிக்கிற மேலான புதுநிலை உருவாகி விட்டது.

நியூகேட் சிறையில் மட்டுமல்ல, இங்கிலாந்தில் உள்ள எல்லாச் சிறைகளிலும் சீர்திருத்தங்கள் செய்யப் படவேண்டும் என்பதை, எலிசபெத் ஓயாமல் எடுத்துக் காட்டி வந்தார். பல்வேறு சிறைகளுக்கும் சென்று, ஆங்காங்கு உள்ள நிலைமைகளைக் கண்டு, அவற்றின் கொடுமைகளைச் சொற்பொழிவுகள்—நூல்கள் ஆகியவற்றின் வாயிலாக எடுத்துக் கூறி அவற்றைத் திருத்தி அமைக்கவேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்பதை அனைவரும் உணருமாறு செய்துவந்தார்.

1813-ம் ஆண்டில், அவருடைய 33-ஆம் வயதில் தொடங்கிய இந்த அரும்பெரும் பணியை

1845-ம் ஆண்டில் அன்னாரின் 65-ம் வயதில் இறப்பைத் தழுவிய அந்த இறுதி விநாடி வரையில், எலிசபெத், ஓய்வு ஒழிவு இன்றி ஆற்றிவந்தார்.

அந்த அம்மையார் ஆற்றிய அருந்தொண்டின் பயனாக, பிரிட்டிஷ் பாராளுமன்றம் சிறைச்சாலைகளைச் சீர்திருத்துவதற்கான சட்டத்தை நிறைவேற்றியது; பிரிட்டிஷ் பெரு நாட்டின் சிறைகளெல்லாம்ஒளியும்காற்றும் மனிதப் பண்பும் நிறைந்த புதிய இடங்களாக மாற்றி அமைக்கப் பட்டன. பிரிட்டிஷ் சிறைகள் மட்டுமா—ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் இருந்த சிறைகளும், புதுவாழ்வும் புது வடிவமும் புது உணர்ச்சியும் பெறலாயின. ஆஸ்டிரேலியா முதலிய பிறகண்டங்களிற் கூடச் சிறைச்சாலைகளின் வாழ்க்கையில் ஒரு புத்தொளி தோன்றலாயிற்று.

சிறைச்சாலைகள் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் அறச்சாலைகளாக விளங்கவேண்டுமே தவிர, தவறு இழைத்தவர்களைப் பழிவாங்கும் பாசறைகளாக இருத்தல் ஆகாது என்னும் கருத்து, இருபதாம் நூற்றாண்டில், நல்லறிவாளர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே, இத்தகைய பகுத்தறிவுக் கருத்தை எண்ணற்றோரின் எதிர்ப்புக்கு இடையே, துளியும் தயங்காமல் எடுத்துக் கூறியஏற்றம் நிறைந்தவர் எலிசபெத். எடுத்துக் கூறியதோடு தன் கடமை முடிந்து விட்டது என்று எண்ணிச்சாய்வு நாற்காலியில் ஓய்வு பெற்று விடாமல், அந்த இலட்சிய கீதத்தை நடைமுறை நாதமாக்குவதற்காக, ஏறத்தாழ முப்பது ஆண்டுகள், ஈடு இணையற்றமுறையில் பணி புரிந்த பெருமைமிக்க வரலாற்றையும் உடையவர் எலிசபெத்.

அவருடைய புகழ் இன்றும் என்றும் நின்று நிலைக்கும் என்பதை, நாம் அல்ல, உலக வரலாறு, என்றென்றும் சொல்லிச் சொல்லிப் பூரித்துக் கொண்டிருக்கும்.

—"காஞ்சி"

எவனேனும் தனது சகோதரரில் எவனையானும் பற்றிக் கோட் சொல்ல உன்னிடம் வருவானாயின், அவனுக்குச் செவி சாய்க்க முற்றிலும் மறுத்து விடு. காதாற் கேட்பதும் பெரும் பாவம். பின்வரும் கேடுகட்கு மூலை அதனிடமே உள்ளது. மேலும், ஒவ்வொருவரது குற்றங் குறைகளையும் பொறுத்துக் கொள். இலக்ஷக்கணக்காகக் குற்றங்களை மன்னித்துவிடு.

—சுவாமி விவேகானந்தர்

தொழிலாளர் நலம் கண்ட செம்மல்

— டி. ஏ. தனபாண்டியன் —

பாரத நாடு சுதந்திரமிழந்து அந்நிய ஆட்சியின்கீழ் அல்லலுற்ற காலத்தில், தமிழகத்தில் விடுதலை வீரராகத் தோன்றி நம் மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியும், உரிமை வேட்கையும் ஊட்டிய தலைசிறந்த தலைவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையாவர். பிள்ளையவர்கள் தனக்கென வாழாமல் தாய்நாட்டின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த தியாகசீலர். அஞ்சா நெஞ்சுடன் ஆங்கில ஆட்சியை எதிர்த்து நின்று, மக்கள் மனதில் சுதேச உணர்ச்சியை உண்டாக்கிய வீரர். சுதேசிக் கப்பல் மூலம் வாணிபம் நடத்தி நாட்டின் வளத்தைப் பெருக்கவும், நம் தொழிலாளர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பாடுபட்ட தலைவர். அவர் செய்த தன்னலமற்ற சேவையைச் சொன்னால் உடல் சிலிர்க்கும். அவர் தாய் நாட்டிற்காகச் செய்திருக்கும் அரும்பெரும் தியாகத்தை நினைத்தால் உயிர் நிமிர்ந்து உணர்ச்சி பொங்கும். அவர் சிறையில் பட்ட இன்னல்களையெல்லாம் சிந்திக்க சிந்திக்க உள்ளமெல்லாம் நெக்கு நெக்காய் உருகும். நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை ஒரு பாடலிலே இதை அழகாகச் சொல்லியிருக்கிறார்.

மடமை யதோ பிறநாட்டார்
மயக்கந்தானோ
மக்களெல்லாம் சுதந்திரத்தை
மறந்தாராகி
அடிமை இருள் நள்ளிரவாய்
அனைத்தும் மூடி
யாரும் தலைநீட்ட வாணா
அந்த நாளில்
திடமனத்துச் சிதம்பரம்பேர்
பிள்ளைவாள் தான்
செய்திருக்கும் அச்சமற்ற
சேவை சொன்னால்
உடல் சிலிர்க்கும் உயிர் நிமிர்ந்து
உணர்ச்சி பொங்கும்
உள்ளமெல்லாம் நெக்கு நெக்
காய் உருகுமன்றோ.

நம் பாரத மக்கள் சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பே கடலைக் கடந்து எகிப்து, ரோம் போன்ற நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து பாரதப் பண்பாட்டையும் கலாசாரத்தையும் பரப்பி வந்தார்கள். அதிலும் தமிழ் மக்கள் கப்பலோட்டும் தொழிலிலும் கப்பல் கட்டும் கலையிலும் சிறந்து விளங்கினர். சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு சோழ நாட்டை ஆண்டுவந்த ராஜராஜ சோழன் காலத்தில் எப்படித்

தமிழ் மக்கள் சிறந்த கடற்படை வீரர்களாக இருந்தார்கள் என்றும் சரித்திரம் வாயிலாக அறிகிறோம். இவ்வளவெல்லாம் புகழும் பெருமையும் கொண்ட தமிழகம், பிற்காலத்தில் அந்நியரான ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டபோது படிப்படியாகத் தனது உரிமையையும் உடைமையையும், செல்வத்தையும், முன்னேற்றத்தையும் இழக்க ஆரம்பித்தது.

அக்காலத்தில் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே "பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நாவிகேஷன்" கம்பெனியின் சப்பல்கள் ஓடிக்கொண்டிருந்தன. வெள்ளை வணிகர் இந்தக் கப்பல் தொழிலை தங்கள் ஏகபோக வாணிபமாக வைத்துக் கொள்ளை லாபம் அடிப்பதைக் கண்டு சிதம்பரனார் மனம் குமுறினார். செல்வம் எத்தனையுண்டு புவிமீதே அவையாவும் படைத்த தமிழ் நாடு என்று பாரதி பெருமிதத்தோடு பாடிய நாட்டில் இந்த அவலநிலை இருப்பதா என்று அவர் ஏங்கினார். நாமும் ஏன் ஒரு கப்பல் கம்பெனி ஆரம்பித்து கப்பல் தொழிலை நடத்தக் கூடாது என்று எண்ணினார். சிலர் அவரது முயற்சியைக் கண்டு நகைத்தனர். சிலர் இது நடைபெறக் கூடிய காரியமல்ல என்று அதைரிய மூட்டினர். ஆங்கில வணிகரோ அவரை பயமுறுத்தினர் ஆனால் பிள்ளையவர்களோ இதற்கெல்லாம் அஞ்சவில்லை. அவரது மனத்தின் திண்மையை நோக்கும்போது நமக்குத் தெய்வப் புலவரின் குறள் ஒன்று ஞாபகம் வருகிறது.

"எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

ஆம். அவர் எண்ணிய காரியத்தை எண்ணியபடியே செய்து முடிக்கும் மனத்திண்மை பெற்றிருந்தார். 1906-ம் வருஷம் சுதேசிக்கப்பல் கம்பெனியை ஆரம்பித்து அதைப் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்தார். தமிழைப் போற்றியவரும், தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவருமான பாலவநத்தம் ஜமீன்தார் திரு. பாண்டித்துரை சாமித் தேவர் கம்பெனியின் தலைவராக நியமிக்கப்பட்டார்; பிள்ளையவர்கள் கம்பெனியின் செயலாளராகப் பணியாற்றி வந்தார். வட இந்தியாவுக்குச் சென்று பெரிய தொழிலதிபர்களையெல்லாம் சந்தித்து நிதி சேர்த்தார். வட இந்தியாவுக்குப் போகும்பொழுது "நான் தமிழ்நாடு திரும்பும்பொழுது கப்பலுடன் திரும்புவேன். இல்லாவிட்டால் திரும்பவே மாட்டேன். இது உறுதி" என்று சபதம் செய்து விட்டுச் சென்றார். அதே மாதிரி அவர் பம்பாயிலிருந்து தூத்துக்குடி திரும்பும்பொழுது ஒரு கப்பலுடன் திரும்பினார். சீக்கிரமே மற்றொரு கப்பலும் வாங்க ஏற்பாடு செய்தார்.

இந்தச் சுதேசிக் கப்பலில் வாணிபம் செழித்தோங்கி வருவதைக் கண்ட பிரிட்டிஷ் கம்பெனியார் இதை ஒழித்து விடுவதற்குப் பல

முயற்சிகள் செய்தார்கள். தங்கள் கப்பல் கட்டணங்களைக் குறைத்தார்கள்; பொய்ப்பிரசாரம் செய்து பார்த்தார்கள்; ஒன்றும் பலிக்கவில்லை. பிரிட்டிஷ் கம்பெனியைச் சேர்ந்த முதலாளிகள் பிள்ளையவர்களை அணுகி ஒரு லட்சம் ரூபாய் தருவதாகவும், சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகிக் கொள்ளும் படியும் கேட்டார்கள். பிள்ளையவர்கள் இதை வெறுத்து உதறித் தள்ளினார்கள். வள்ளுவர் ஒரு குறளில் சொல்லுகிறார்.

"ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

இந்தக் குறளுக்கு சிதம்பரனாரை விட வேறு சிறந்த உதாரணம் காண முடியாது.

தூத்துக்குடியில் கோரல் மில்ஸில் வேலை செய்த தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சம்பளம் சாப்பாட்டுக்குக் கூட போதவில்லையென்றும் இன்னும் கொஞ்சம் சம்பளத்தைக் கூட்டித் தரவேண்டும் எனவும் மில் நிர்வாகிகளிடம் முறையிட்டார்கள். மில் முதலாளிகள் இதற்கு இணங்கவில்லை. ஆகவே போராட்டம் ஆரம்பித்தது. வேலை நிறுத்தம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. சிதம்பரம் பிள்ளையவர்கள் தனது நண்பர்களிடம் சொல்லி பல தொழிலாளர்களுக்கு வேலை வாங்கித் தந்தார். கடைசியில் முதலாளிகள் தொழிலாளிகள் கூலியை உயர்த்த ஒப்புக்கொண்டனர். இதனால் தொழிலாளர் எல்லோரும் பிள்ளையவர்களை தங்கள் தந்தை போல் நேசித்தனர்.

அக்காலத்தில் மக்கள் அடிமை வாழ்வில் மூழ்கி, தாழ்வுற்று, சோர்வுற்று இருந்தார்கள். நம் மக்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாமல் இருந்தது. இதைக் கண்டு பிள்ளையவர்கள் கொதித்தெழுந்தார். நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டு வந்த காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்தார். அன்று காங்கிரஸில் இரண்டு கட்சிகள் இருந்தன. ஒன்று தீவிரக் கட்சி; அடுத்தது மிதவாதக் கட்சி. பால கங்காதர திலகர் தீவிரக் கட்சியைச் சேர்ந்தவர். அவர், "சுதந்திரம் எனது பிறப்புரிமை. அதை அடைந்தே தீர்வேன். என்னுள் சுதந்திர உணர்ச்சி இருக்கும் வரை நான் ஓர் வாலிபன். அந்த உணர்ச்சியை எந்த நெருப்பாலும், எந்தப் புயலாலும், எந்த ஆயுதத்தாலும் அழிக்க முடியாது" என்று கர்ஜித்தார். சிதம்பரம் பிள்ளையும் அமரகவி பாரதியாரும் திலகரின் தீவிர கட்சியைச் சேர்ந்தவர்கள். இவ்விருவரும், நம் மக்களுக்கு சுதந்திர உணர்ச்சியை ஊட்டி, அவர்களை சுதந்திரப் போருக்கு தயாராகத் துடித்தனர்.

இந்தச் சமயத்தில் திருநெல்வேலியில் தேசாபிமான சங்கம் என்று ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தின் ஆதரவில் சுதந்திரப் போராட்

டத்தின் அவசியத்தை வற்புறுத்தி சுப்ரமணிய சிவா என்ற தியாகியும் சிதம்பரம் பிள்ளையும் அடிக்கடி சொற்பொழிவாற்றினார்கள். சிதம்பரனார் பேசினால் கூட்டத்தில் நிசப்தம் குடிகொள்ளும். அவர் பேசும் பொழுது மக்கள் தங்களையே மறந்து பரவசப்பட்டுக் கேட்பார்கள்.

நமது உரிமையையும், கண்ணினுமினிய சுதந்திரத்தையும் அடைவதற்கு நாம் எந்தவித தியாகத்தையும் ஏற்கச் சித்தமாக இருக்க வேண்டும் என்று அவர் உணர்ச்சியோடு மக்களை அறைகூவி அழைக்கும்போது, கேட்டவர் மனதில் சுதந்திரத் தீ சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அவரது பேச்சைக் கேட்ட தொழிலாளர், அவர் என்ன சொன்னாலும் செய்யத் தயாராக இருந்தனர். அவரது தோற்றத்தையும் கலகலத்த பேச்சையும், சிரிப்பு முகத்தையும் கவிஞர் ராமலிங்கம் பிள்ளையவர்கள் ஒரு பாடலில் அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

“கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக் கேட்கும்; கறுப்பெனினும் சிரிப்பு முகம் கருணை காட்டும்; குள்ளமென்னும் ஒரு உருவம் இரு கைகூப்பி, குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்கி நிற்கும். வெள்ளையின்றி வேறு நிறம் அறியா ஆடை; வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்; கொள்ளை கொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்; குலவு பிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்”

அக்காலத்தில் விபின் சந்திர பாலர் தேசிய காங்கிரஸில் சேர்ந்து பல அரிய பணிகள் ஆற்றினார். தேச சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அரவிந்தருக்கு விரோதமாக அவர் கோர்ட்டில் சாட்சி சொல்ல மறுத்ததால் ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றார். 1908-ம் வருஷம் மார்ச் 9-ம் தேதி அவர் விடுதலை அடைந்தார். இதைச் சிறப்பாகக் கொண்டாட தேசாபிமான சங்கத்தார் ஏற்பாடு செய்தனர்.

சிதம்பரனாரும் சுப்ரமணிய சிவாவும் இக்கூட்டத்தில் பங்கு கொள்ளக் கூடாது என திருநெல்வேலி கலெக்டர் விஞ்சுதுரை உத்தரவு பிறப்பித்திருந்தார். சிதம்பரனார் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. மார்ச் மாதம் 9-ம் தேதி ஏற்பாடு செய்தபடியே திருநெல்வேலியில் ஓர் மாபெரும் ஊர்வலமும் கூட்டமும் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். சிதம்பரம் பிள்ளை பேச எழுந்தார். “வந்தே மாதரம்” என்று மக்களிடையே இருந்து வந்த ஒலி வானைப் பிளந்தது.

பல்லவி

வந்தே மாதரமென்போம்— எங்கள்
மாநிலத் தாயை வணங்குதுமென்போம்

சரணம்

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே — நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவர்க்
—கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்
—டும் இந்த
ஞானம்வந்தாற்பின் நமக்கெது
—வேண்டும்?

"வந்தே மாதரம்" என்ற கோஷம் அன்று திருநெல்வேலி நகரமெங்கும் ஒலித்தது. மக்கள் புதிய ஆர்வமும் சுதந்திர உணர்ச்சியும் உத்வேகமும் கொண்டார்கள். சிதம்பரனாரின் அரசியல் செல்வாக்கைக் கண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் பயந்தது. திருநெல்வேலி கலெக்டர் விஞ்சு துரை சிதம்பரம் பிள்ளையைச் சிறைப் படுத்த தீர்மானித்தார். தூத்துக்குடியில் அவரைச் சிறைப்படுத்தினால் கலகம் ஏற்படும் என்று எண்ணி திருநெல்வேலியில் தன்னைச் சந்திக்க வேண்டுமென உத்தரவு அனுப்பினார்.

சிதம்பரனார் வந்ததும் கலெக்டர் அவர்மீது பலவித குற்றங்களைச் சுமத்தினார். அக்குற்றங்கள் இவைதான். அரசாங்கத்தின் அனுமதி இன்றி ராஜ துவேஷமாகப் பேசியது ஒரு குற்றம். ஒன்றும் அறியாத மக்களை "வந்தே மாதரம்" என்று உரக்கச் சொல்லும்படி சொன்னது அடுத்த குற்றம். ஆங்கிலேயருக்குப் போட்டியாக கப்பலோட்டியது இன்னொரு குற்றம். கலெக்டர் கேட்ட கேள்விகளையெல்லாம் பாட்டாகப் பாடியிருக்கிறார் பாரதியார்.

"நாடெங்கிலும் சுதந்திர
வாஞ்சையை
நாட்டினாய் கனல் மூட்டினாய்
வாட்டியுன்னை மடக்கிச்
சிறைக்குள்ளே
மாட்டுவேன் வலி காட்டு
வேன்'

'கூட்டங் கூடி வந்தே மாதர
மென்று
கோஷித்தாய் எமைத் தூஷித்
தாய்
ஓட்ட நாங்களெடுக்க வென்றே
கப்பல்
ஓட்டினாய்; பொருள் ஈட்டினாய்

இதற்குச் சிதம்பரம் பிள்ளை தந்த பதில் இதுதான். எங்கள் நாட்டில் நாங்கள் கூடிப் பேசுவதற்குக் கூட அனுமதி கிடையாதா? அநியாயம், அநியாயம். இதைப்போல் வேறு அநியாயம் கிடையாது. "வந்தே மாதரம்" என் தாய் நாட்டை நான் மனதார வணங்குகிறேன் என்று சொன்னால் அது குற்றமா? எங்கள் கடைசி மூச்சு உள்ளவரைக்கும் நற்றவ வானினும் நனி சிறந்த எங்கள் பொன்னாட்டை வாழ்த்திக்கொண்டே இருப்போம். இது உறுதி. எங்கள் நாட்டு வாணிபத்தைப் பெருக்கி எங்கள் தொழிலாளர் நலம் பெருக நாங்கள் கப்பல் ஓட்டுவது குற்றமா? எங்களை அடக்குமுறையால் ஒரு நாளும் உங்களால் ஆள முடியாது. எங்கள் சதையைத் துண்டு துண்டாக வெட்டினாலும் எங்கள் இதயத்திலுள்ள தாய் நாட்டுப் பற்று ஒருநாளும் ஒழியாது. இது நிச்சயம்" என்று தீரத்துடன் பதில் அளித்தார்.

"வந்தே மாதரமென்றுயிர்
போம்வரை
வாழ்த்துவோம் முடி தாழ்த்து
வோம்
எந்தமாருயிர் அன்னை யைப்
போற்றுதல்
ஈனமோ?—அவமானமோ?"
"சதையைத் துண்டு
துண்டாக்கினும் முன்
னெண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?"
இதையத்துள்ளேயிலங்கு
மஹாபக்தி
யேகுமோ? நெஞ்சம்
வேகுமோ?"

இதைக் கேட்ட கலெக்டரின் கோபம் அதிகரித்தது. திருநெல்வேலி ஜில்லாவைவிட்டு உடனே வெளியேற வேண்டும் என்றும், இனிமேல் அரசியல் விஷயங்களில் தலையிடுவதில்லை என்று நன்னடத்தை ஜாமீன் கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். இதற்கு சிதம்பரம் பிள்ளை ஒத்துக்கொள்ளாததால் உடனே அவர் கைது செய்யப் பட்டார் சிதம்பரம் கைதுசெய்யப்பட்டார் என்ற செய்தி காட்டுத்தீ போல் பரவியது. திருநெல்வேலி நகரில் கடையடைப்பு ஏற்பட்டது.

சிதம்பரம் பிள்ளைமீது போலீசார் வழக்குத் தொடுத்தார்கள். திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி பின்ஹே சிதம்பரம் பிள்ளை குற்றவாளி என்று தீர்ப்பளித்து, ராஜ துரோக குற்றத்திற்காக 20 வருட தீவாந்திர தண்டனையும் சுப்பிரமணிய சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்கு 20 வருட தீவாந்திர தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்புக் கூறினார். சுதந்திரத்திற்காகப் போராடிய வீரத் தமிழ் மகனை, தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட அண்ணலை, தமிழ் நாடு பெற்றெடுத்த அரசியல் தலைவரை, கப்பல் ஓட்டி சுதேசியத்தை வளர்த்த கர்ம வீரனை பிரிட்டிஷ் அரசாங்கம் சிறைப் படுத்தி அகமகிழ்ந்தது. பிள்ளையவர்களுக்கு அப்பொழுது வயது 35 தான். தன் பெற்றோர்களையும் இளம் மனைவியையும் குழந்தைகளையும் பிரிந்து சிறையில் வாடினார். சிதம்பரனார் சிறைப் பிடிக்கப்பட்டார் என்று கேள்விப்பட்டு, பிள்ளையவர்களின் ஆருயிர் நண்பர் பாரதியார், தூண்டிற்புழுவினைப்போல் துடி துடித்துப் போனார். ஆண்டவனிடம் முறையிட்டார். 'சர்வேசா, தர்மமேவெல்லும் என்று சான்றோர் சொன்னது பொய்யாகி விட்டதா? செந்தமிழில் சிறந்த சிதம்பரனார் சிறையில் கலங்குவதை நீ காணவில்லையா?' என்று ஒரு பாடலில் கேட்கிறார்.

"தர்மமே வெல்லுமெனுஞ்
சான்றோர் சொற்பொய்
யாமோ?
கர்மவினைவு கள்யாங்
கண்டதெல்லாம் போதாதோ
மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையோ.
மாதரையும்மக்களையும்
வன்கண்மையாற் பிரிந்து

காதலினோர்
கருத்தழிதல் காணுயோ?"

சிதம்பரம் பிள்ளை தனக்குக் கொடுத்த தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று சென்னை ஹைகோர்ட்டுக்கும் பிரிவு கவுன் சிலுக்கும் மனுச் செய்தார். கடைசியில் 40 வருஷத் தீவாந்திரத் தண்டனை 6 வருஷக் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. கோயமுத்தூர் கண்ணனூர் சிறைகளில் அவர் தண்டனைக் காலத்தைக் கழித்தார். அவர் சிறையில் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. கொலை, களவு முதலிய பாதகச் செயல் புரிந்த கைதிகளிலும் கேவலமாக நடத்தப்பட்டார். கேழ்வரகுக் கஞ்சிதான் அவருக்குக் கொடுக்கப்பட்டது. செந்தமிழ் தேர்ந்த நாவலர் செக்கிழுத்து மூர்ச்சித்து விழுந்தார். அவர் சிறையில் யில் பட்ட வருத்தமெல்லாம் விரித்துரைக்கில் கல்லான மனத்தவரும் கண்ணீர் உகுத்து விடுவார்கள்.

ஆறு வருடங்கள் கழிந்தன. 1912-ம் வருஷம் சிதம்பரனார் விடுதலையாக்கப் பட்டார். விடுதலையான பின்பும் அவர் தேச சுதந்திரத்தையும் தொழிலாளர் நலனையும் மறக்கவேயில்லை. பெரம்பூர் ரயில்வே சங்கத்தின் துணைத் தலைவராகச் செயலாற்றி அவர்களது நலனுக்குப் பாடுபட்டார். உழவர், தொழிலாளர் முதலியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, 1921-ம் வருஷம் சென்னை நகரில் ஆரம்பித்து வைத்தார். இதுபோன்ற ஸ்தாபனங்களைத் தூத்துக்குடியிலும் ஆரம்பித்து வைத்தார். அவர் தொழிலாளருக்குச் செய்த சேவையெல்லாம் நினைக்கும் போது அவரை, தொழிலாளர் நலம் கண்ட செம்மல் என்று குறிப்பிடுவதுதான் சிறந்தது எனத் தோன்றுகிறது. அன்று அவர் தொழிலாளர் இயக்கத்திற்கு நட்ட வித்துதான் இன்று பலகிளைகளுள்ள பெரிய மரமாய் விளங்குகிறது என்று நாமக்கல் கவிஞர் அழகாக வர்ணிக்கிறார்.

"உழுது பல தொழில் செய்து
உழைப்போரெல்லாம்
உணவும் உடைவீடின்றி
உருகி வாட
பழுது மிக அன்னியர்க்குத்
தரகராகப்
பசுப்புகின்ற வீணருக்கே
சுகங்கள் என்று
அழுதுருகித் தொழிலாளர்
இயக்கம் கண்டு
அந்நாளில் சிதம்பரனார்
நட்ட வித்தாம்
விழுது பலவிட்டு பெரும்
மரமாய் இன்று
வெவ்வேறு கிளைகளுடன்
விளங்கக் காண்போம்

பிள்ளையவர்கள் 1936-ம் ஆண்டு இம்மண்ணுலகை நீத்துச் செல்வதற்கு சிறிது நேரத்திற்கு முன்புகூட "என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்" என்னும் பாரதியாரின் பாட்டைக் கேட்டு "நான் பாரத சுதந்திரத்தைக் காணக் கொடுத்து வைக்க

வில்லையே" என்று கலங்கினார். நம் நாட்டின் லட்சோப லட்சம் தொழிலாளர்களும் ஏழை மக்களும் என்றைக்கு நல்வாழ்வு வாழப் போகிறார்களோ என்று ஏங்கினார்.

அவர் வாழ்வின் உண்மையை வள்ளுவர் ஓர் குறளில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

"உள்ளத்தால் பொய்யாது
ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

ஆம்; அவர் உள்ளத்தால் பொய்யாது ஒழுகினார். ஆகவே நம் எல்லோருடைய மனதிலும் நிறைந்து விட்டார்.

பகைவர்கள் நம் நாட்டைத் தாக்கியிருக்கும் இந்தச் சமயத்தில் சிதம்பரனாரின் அடங்காத சுதந்திர உணர்ச்சி, வீரம், அஞ்சாமை, தியாக சிந்தை முதலியவற்றைப் போற்றி அவரைப் போல் நாமும் நம் தாயகத்தைக் காக்க நம்மை அர்ப்பணிப்போம். அது ஒன்று தான் நாம் அவருக்குச் செலுத்தும் சிறந்த அஞ்சலி.

(மதராஸ் அ. இ. ரே. நிலையம் தொழிலாளர் நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது)

புதுமுறை சங்க வாய்பாடு

V.K. சேஷாத்திரி. B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

பிரிட்டனில் பொதுத் தேர்தல்!

நாவலர் நெடுஞ்செழியன்

மகிழ்ச்சியளிக்கும் நிகழ்ச்சி

பிரிட்டனில் நடைபெறும் பொதுத் தேர்தலை நேரில் காணும்வாய்ப்பு ஏற்பட்டிருப்பது காமன்வெல்த் பாராளுமன்றக் குழுப் பிரதிநிதிகளான எங்களுக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியினை அளிக்கிறது.

இப்பொழுது பிரிட்டனுக்கு வந்துள்ள குழுவில், தமிழகம்—மைசூர்—இலங்கை —மலேசியா சிங்கப்பூர்-ஆஸ்திரேலியா-ஹாங் காங்-கென்யா—மொரீஷியல் — ஜெர்சிதீவு-மாங்கனீஸ்தீவு - பார்பாடஸ்-ஜமைக்கா-கனடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருபது பிரதிநிதிகள் அடங்கியிருக்கிறோம்.

காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்குகளில், பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் கலந்து கொள்வதாக இருந்தது. பொதுத்தேர்தல் வந்து விடவே பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தத்தம் தொகுதிப் பணிகளையும் கட்சித் தேர்தல் பிரச்சாரப் பணிகளையும் செய்ய முற்பட்டுள்ளார்கள். அதன் காரணமாகச் சில கருத்தரங்குகள் நிறுத்தப்பட்டு, அந்த வேளைகளில் தேர்தல் முன்னேற்பாடுகளைப் பார்க்கும்படி திட்டம் வகுத்துத் தந்துள்ளார்கள்.

முப்பெரும் கட்சிகள்

பொதுத் தேர்தலில் இங்கு மூன்று முக்கியமான கட்சிகள் பங்கு ஏற்று மிகத்தீவிரமாகத் தேர்தல் முன்னேற்பாடுகளைச் செய்து வருகின்றன. தொழிற் கட்சி—கன்சர்வேடிவ் கட்சி—லிபரல் கட்சி ஆகிய மூன்று கட்சிகளாகும்.

இவற்றில் தொழிற் கட்சியும்-கன்சர்வேடிவ் கட்சியும்தான் எதிரும் புதிருமாக நின்று மிகக் கடுமையாகப் போட்டியிடும் பெருங் கட்சிகளாக விளங்குகின்றன! இந்த இரண்டு கட்சிகள் தாம் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றி வருகின்றன!

லிபரல் கட்சியின் போக்கு

லிபரல் கட்சி, குறைந்த அளவு எண்ணிக்கையுள்ள—அதாவது, இருபது முப்பது உறுப்பினர்களை வெற்றி பெற வைக்கும் வாய்ப்புள்ள கட்சியாக இருந்து வருகிறது! இந்தக் கட்சி தொழிற்கட்சிக்கும் —கன்சர்வேடிவ் கட்சிக்கும் இடையில் இருந்து கொண்டு, சிலபொழுது

தொழிற்கட்சியினை ஆதரித்தும், சிலபொழுது கன்சர்வேடிவ் கட்சியினை ஆதரித்தும் வருகிறது.

இப்பொழுது பாராளுமன்றத்தில், எதிர்க் கட்சியாக விளங்கி வரும் கன்சர்வேடிவ் கட்சியின் பக்கம் இருந்துகொண்டு தொழிற் கட்சியை எதிர்த்து வரும் கட்சியாக லிபரல் கட்சி விளங்கும் காரணத்தால், தொழிற்கட்சியின் தலைமை அமைச்சர் திரு. ஹெறால்டு வில்சன்—மூன்று பேர்கள் மட்டுமே மிகவாகக் கொண்ட பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஆளவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

கம்யூனிஸ்டுகளும் சுயேச்சைகளும்

கம்யூனிஸ்டுக் கட்சி ஒவ்வொரு தேர்தலிலும் சில பல இடங்களில் போட்டியிடுகிறது. என்ருலும், அது ஓரிரு தேர்தல்களில் ஓரிரு இடங்களை மட்டுமே பெறக்கூடிய நிலைமையில் இருந்து வருகிறது.

சுயேச்சைகளும் சிலர் போட்டியிடுகிருர்கள். அவர்கள் அவ்வளவு எளிதாக வாக்காளர்களின் ஆதரவைப் பெற்று வெற்றிபெற முடிவதில்லை.

மூன்று பேர்களின் மிகலான வலிவை மட்டுமே வைத்துக் கொண்டு ஆளுவது என்பது தலைமையமைச்சர் வில்சனுக்குக் கடினமான ஒன்ருகவே இருந்து வந்தது. 'ஆட்சிக்கவிழுமோ என்ற ஐயத்தோடும், அச்சத்தோடும் ஆளவேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. இது ஆளும் கட்சிக்குத் தலைவலியாகவே இருந்து வந்தது!

உள்நாட்டுப் பிரச்சினைகளிலும் குறிப்பாக வெளிநாட்டுப் பிரச்சினைகளிலும் துணிவான முடிவை எடுக்க முடியாமலும் செம்மையான அரசியல்—பொருளாதார—சமூக சூழ்நிலைகளை உருவாக்க முடியாமலும் திரு. வில்சன் பல முறை தவிக்க வேண்டி வந்தது.

வில்சனின் அரசியல் பெருந்தன்மை

இந்த நெருக்கடி நிலைமையிலிருந்து மீளவும், கணிசமான பெரும்பான்மை வலிவு பெற்று நிலையான — துணிவான ஆட்சியை அமைக்கவும் புதிய பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய இன்றியமையாமை திரு. வில்சனுக்கு ஏற்பட்டது. இது காரணம் பற்றிதான் திரு. வில்சன் அவர்கள் புதிய தேர்தலை நடத்த நம்பிக்கையோடும் உறுதியோடும் தாமாகவே முன் வந்தார்.

1964—ல்தான் முறைப்படியான பொதுத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் தான் தொழிற்கட்சி பெரும்பான்மை வலிவைப் பெற்று, கன்சர்வேடிவ் கட்சியை ஆட்சியை விட்டு அகற்றியது.

மக்களின் உளங்கவர போட்டா போட்டி!

மக்களின் உள்ளத்தைக் கவரு

வதிலே அரசியல் கட்சிகள் போட்டா போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன! பொதுத் தேர்தலுக்கான சூழ்நிலைகளை உருவாக்குவதில் செய்தித் தாள்கள்—வாமொலி — தொலைக் காட்சி போன்ற கருவிகள் பெரிதும் பயன்படுகின்றன!

ஒவ்வொரு கட்சியும் தாங்கள் சாதித்த சாதனைகளையும் சாதிக்க இருக்கும் சாதனைகளையும் தெளிவாக விளக்கிக் கூறி மற்ற கட்சி சாதிக்க மறந்தவைகளையும்அதன் குற்றம் குறைகளையும் அழுத்தந் திருத்தமாகச் சுட்டிக் காட்டு வதிலே மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

செய்தித் தாள்களின் மூலமாகக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையே வாதங்களும், எதிர்வாதங்களும்காரசாரமாகக் கிளப்பப் படுகின்றன.

பண்பாடு குலையாத தாக்குதல்

போட்டியிடும் கட்சித் தலைவர்கள் ஒருவரையொருவர் நாகரிகமான முறையில் — பண்பாடு கெடாதபடி அருமையாகத் தாக்கிக் கொள்ளுகிறார்கள்.

பேச்சுக்கு மறுப்பு—மறுப்புக்கு மறுப்பு—என்ற வகையில் செய்தித் தாள்களில் பத்தி பத்தியாகச் செய்திகள் வெளிவருகின்றன.

செய்தித்தாள் நிருபர்கள்— கட்சிகளின் தலைவர்களையும், வேட்பாளர்களையும் கண்டகண்ட கேள்விகளைக் கேட்டு மடக்கி விடை பெறுவதிலேயே சுறுசுறுப்பாக ஈடுபடுகிறார்கள்.

அரசியல் கட்சிகளின் முக்கியமான தலைவர், கார்—புகைவண்டி — விமானம் — ஹெலிகாப்டர் போன்ற ஊர்திகளைப் பயன்படுத்திக் கொண்டு ஊர் ஊராகச் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள்.

தலைமையமைச்சர் ஹெரால்டு வில்சன் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் எட்வர்ட் ஹீத் அவர்களும், 3000 — 4,000 மைல்கள் என்று நாடெங்கும் சுற்றுப் பயணத்தை மேற் கொண்டு வருகிறார்கள்.

வேட்பாளர்களின் படங்களும், கட்சிக் கொள்கைகளை விளக்கிடும் தட்டிகளும், படுதாக்களும் தனிப்பட்டோர் இல்லங்களிலும் தனிப்பட்டோர் தொழிலகங்களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

சுவர் எழுத்துக்குத்தடை

பொது இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுவதோ சுண்ணும்பாலும் வண்ணக் குழம்புகளால் எழுதுவதோ சட்டப்படி தடுக்கப் பட்டிருக்கின்றன.

முன்பெல்லாம் அவை அனுமதிக்கப்பட்டிருந்ததால் அந்தப் பழக்கம் பொது இடங்களைப் பெரிதும் மாசுபடுத்திவிடுகிறது என்பதற்காகச் சட்டத்தால் அந்தப் பழக்கத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளார்கள். சங்கங்களின் சார்பாக ஆங்காங்குள்ள மண்டபங்களிலும், பொது இடங்களிலும், தொழிற்சாலைகளுக்கு முன்பும் (அனுமதிக்கப்பட்ட இடத்தில் மட்டும்) தே

தல் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

கூட்டத்தில் பொது மக்கள் கேட்கும் கேள்விகளுக்குக் கட்சித் தலைவர்களும், கட்சி வேட்பாளர்களும் விடை சொல்லியாக வேண்டும்.

வேட்பாளர்களும், கட்சித் தலைவர்களும் சரியானபடி விடையிறுக்காவிட்டால், கூட்டத்தினர் கேலி, கிண்டல் செய்து எக்கொலி கொட்டி நகைப்பார்கள்.

தேர்தல் பேச்சாளர்கள், அவற்றையெல்லாம் சமாளித்து மீளவேண்டும்.

ஒரே மேடையில் வேட்பாளர்கள்.

சில வேளைகளில் பொதுவான அமைப்பினர் கூட்டத்தைக் கூட்டி, போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரையும் ஒரே மேடையில் ஏற்றிப் பேசச் சொல்லி—கேள்விகள் கேட்டு—விடைபெற முயலுகிறார்கள். அத்தகைய அமைப்புகளுக்கு வேட்பாளர்கள் கட்டாயம் போகவேண்டும். இல்லையேல் அப்படிப் போகாமலிருப்பது இழிவாகக் கருதப்படும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஏதேனும் ஒரு வகையில் பொதுக்கூட்டத்தின் மூலம் பொதுமக்களைச் சந்திக்க வேண்டும். அப்படிச் சந்திக்காவிட்டால் அந்த வேட்பாளர் தேர்தலைப் பற்றியும், பொதுமக்களைப் பற்றியும் வெற்றியைப் பற்றியும், அக்கறை கொள்ளவில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள்!

அது இல்லை என்பதைக் காட்டிக்கொள்வதற்காகவாவது, வேட்பாளர் ஒவ்வொருவரும் பொதுக் கூட்டத்தைக் கூட்டவேண்டிய பொறுப்புடையவராக ஆகிவிடுகிறார்.

வயல் வெளிகளிலும் பிரசாரம்

வேட்பாளர்கள் காரில் ஒலி பெருக்கியைப் பொருத்திக் கொண்டு, மக்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகள், வயல் வெளிகள் ஆகிய இடங்களுக்குச் சென்று, ஓரிடத்திலிருந்து கொண்டு ஒலி பெருக்கி மூலம்—வேலையின் இடையில் குறுக்கிடுவதற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டு—தாம் தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணங்களைக் கூறி, தமக்கு வாக்கு அளிக்கும் படியாகக் கேட்டுக் கொள்கிறார்கள். இப்படி வாக்குக் கேட்கும் முறை ஐந்து அல்லது பத்து நிமிட நேரம் நடைபெறுகிறது.

வானொலி–தொலைக் காட்சியில் வாய்ப்பு

கட்சிகள் பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருக்கும் எண்ணிக்கையின் அடிப்படையில், தொலைக் காட்சியில் தேர்தல் பிரசாரம் செய்ய ஒவ்வொரு நாளும் கட்சி வேட்பாளர்கட்கு நேரம் ஒதுக்கித் தரப்படுகிறது.

தொலைக் காட்சியில், கட்சிகளின் பெருந்தலைவர்கள், நிருபர்

களின் கேள்விகளுக்கு விடையி றுக்கும் போட்டியும் நடைபெறு கிறது.

தலைமையமைச்சர் வில்சனும் எதிர்கட்சித் தலைவர் ஹீத்தும் தொலைக் காட்சியில் தோன்றி நிருபர்களின் முக்கிய கேள்வி களுக்கு விடையளித்தார்கள்

தொழிற் கட்சித் தலைவர், கன்சர்வேடிவ் கட்சித் தலைவர், லிபரல் கட்சித் தலைவர் ஆகிய மூவருக்கும் சேர்ந்து தொலைக்காட்சியில் ஒரே நேரத் தில் பேட்டி தரும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

ஒவ்வொரு கட்சியினரும் தாம் தாம் சாதித்த சாதனைகளையும் சாதிக்கப்போகும் சாதனைகளையும் கூறி தேர்தல் அறிக்கையை வெளி யிட்டுள்ளார்கள்.

தொழிற் கட்சி, 'முடிவு எடுப் பதற்கான நேரம்,' என்று தலைப் பிட்டு 24 பக்கத்தில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக் கிறது.

கன்சர்வேடிவ் கட்சி, 'சொற் கள் அல்ல—செயலே' என்று தலைப்பிட்டு 17 பக்கத்திலும், லிப ரல் கட்சி 'மக்கள் எல்லோருக்கு மாக' என்று தலைப்பிட்டு 16 பக் கத்திலும் தேர்தல் அறிக்கை களை வெளியிட்டிருக்கின்றன.

அரசியல் தெளிவுபெற்ற மக்கள்

இங்கு வாக்காளர்களாக விளங் கும ஆடவர்—பெண்டிர் அனை வரும் அரசியல் தெளிவு பெற்ற வர்களாகவும், அரசியல் உணர்வு கொண்டவர்களாகவும், அன்றா டம் ஏதேனும் ஒரு செய்தித் தாளையாவது பார்த்துச் செய்தி களை அறிந்து கொள்பவர்களாக வும் இருக்கிறார்கள்.

'ஓட்டு' பேரம் சிறிதும் இல்லை

பணம் கொடுத்து வாக்கு வாங் கும் முறையோ, பணம் பெற்றுக் கொண்டு வாக்கு அளிக்கும் பழக் கமோ இங்கு சிறிதும் இல்லை

சிறிதுகூடத் தொல்லைகளுக்கு இடமில்லாத வகையில் பேச்சுரி மையும் எழுத்துரிமையும் நிலை நாட்டப்பட்டு வருகின்றன.

சனநாயகப் பண்புகளையும் முறைப்படி போற்றிக் காப்பாற்றி வளர்ப்பதிலே பிரித்தானிய மக் கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

—'நம்நாடு'

அன்புடைமையும் அருளுடைமையும்

திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பீ. ஏ, எல். டி.

ஒரு சிறு புள்ளி விரிந்து பெருகும் போது, ஒரு பெரிய வட்டமாவது போல, அன்பு வீட்டிலே தொடங்கி வளர்ந்து பெருகி, உலக முழுவதையும் அணைத்துக் கொள்ளக் கூடியது. பத்து மாதம சுமந்து பெற்றெடுத்துப் பாராட்டிச் சீராட்டிப் போற்றி வளர்த்திடும் தாயன்புக்குச் சமமான அன்பு வேறேது? நமக்கு வேண்டியதெல்லாம் கொடுத்து, நாம் நன்கு கற்று மேனிலைக்கு வர வேண்டுமென அரும்பாடு படும் தந்தையின் அன்புக்குத் தான் நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? தாங்கள் கற்றிலராயினும், நம்மைக் கற்றவர்களாகக் அவர்கள் எவ்வளவு தியாகங்களைச் செய்கின்றனர்! "கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள் மேல் காதல்" என்ற பழமொழி மக்கள் பால் பெற்றோர் கொண்டுள்ள அன்பைக் குறிக்கும். எனவே தான் நம் முன்னோர் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று முதல் வகுப்பிலேயே நமக்கு நம் கடமையை உணர்த்தியுள்ளார்கள். "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதை மாணுக்கர்கள் என்றும் மறக்கலாகாது. உங்கள் பெற்றோர்களை விட அதிகமாகக்கற்று விட்டாலும் பெரிய பதவிகளை வகித்தாலும், அவர்கள் பால் மாருத அன்பும் மரியாதையும் இல்லாவிட்டால், உங்கள் வாழ்வு சிறக்காது. இது உண்மை.

நீங்கள் உரிய பருவத்தில் மணம் புரிந்துகொண்டு இல்லாளிடம் காட்டும் அன்பே காதல். அவ்வாறே மனைவியும் கணவன் பால் மாருத அன்பு கொண்டு, அவன் காரியம் யாவிலும் கை கொடுக்க வேண்டும். இருவர் மனமும் அன்பால் பிணிக்கப்படாமல் போனுல் இல்லறம் நல்லறமாகாது.

கணவன் மனைவியரிடையே எத்தகைய அன்பு இருக்க வேண்டும் என்பதைச் சங்க இலக்கியமொன்று அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. கணவனும் மனைவியுமான இரண்டு மான்கள் நல்ல கோடை காலத்தில் ஒரு பாலைவனத்தில் நீர் வேட்கையால் தவித்து, நீரைத் தேடி அலைந்தன. நீண்ட நேரத்திற்குப் பிறகு ஒரு சிறு பள்ளத்தில் மிகக் கொஞ்சம் நீர் இருப்பதைக் கண்டன. ஆவலோடு இரண்டும் நீரில் வாய் வைத்தன. என்ன ஆச்சரி

யம்! நீண்ட நேரமாகியும் நீர் குறையவில்லை ஏன்? ஆண் மான் எண்ணிற்று: "இங்குள்ள நீர் ஒருவருக்குத் தான் தாகம் தணிக்கப் போதுமானதாக உள்ளது. என் மனைவியோ மிகுந்த தாகமுடையவளாய் இருக்கின்றாள். இதில் மிகுதியை நான் குடித்து விட்டால், அவள் நீர் வேட்கையால் இறந்தாலும் இறந்துவிடுவாள். ஆனால் குடிக்காமல் போனாலோ அவளும் குடிக்க மாட்டாள் ஆகவே நான் குடிப்பதுபோல் பாசாங்கு செய்வேன். அவள் நீர் முழுதும் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொள்ளட்டும்" என்று எண்ணி, நீரில்வாயை வைத்தவாறு சும்மா நின்று கொண்டிருந்தது. ஆனால் பெண்மானும் இதே உணர்ச்சியினால் நீரைக்குடிக்காமல் நின்று கொண்டு இருந்ததாம். என்னே அவைகளின் அன்பு! ஐயறிவு படைத்த விலங்குகளிடமுள்ள தாம்பத்திய உறவு ஆறறிவு படைத்த மனிதனிடம் இல்லாமல் போனால், எவ்வாறு இல்லறம் நல்லறமாகும்?

அன்பிலா ரெல்லாந் தமக்
குரிய ரன்புடைய
ரென்பு முரியர் பிறர்க்கு.

இந்த அன்பு வட்டம் விரிந்து, தங்கள் குழந்தைகள் பால் வளருகின்றது. பறவைகளும் மிருகங்களும் தங்கள் குஞ்சுகளிடமும் குட்டிகளிடமும் காட்டும் அன்பை நாம் கண்டு வியக்கின்றோம். நாளாக நாளாக, இவ் வட்டம் இன்னும் விரிகின்றது. உற்றார் உறவினர்களையும் தன்னுள் ஏற்றுக்கொள்ளுகின்றது. விருந்தோம்புதல் என்னும் சிறந்த பண்பாடு அன்பின் விரிவேயாம். விருந்தோம்புவதனாலே பொருள் தொலையாது மேன்மேலும் வளரும் என்பது வள்ளுவர் வாக்கு. மற்றவர்களுக்குக் கொடுப்பதினால் ஒருவன் பெறும் இன்பத்தை வள்ளுவர் பல இடங்களில் பாராட்டுகின்றார். ஏழைக்குக் கொடுப்பதே ஈகை, நாம் கொடுப்பதைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி படைத்தோருக்கு ஏதேனும் கொடுப்பதற்குக் "குறியெதிர்ப்பு" என்று பெயர் கொடுக்கின்றார்.

தன் குலத்தார், தன் நாட்டார், தன் மதத்தார் என்று இந்த அன்பு விரியும் போது, தியாக உணர்ச்சியும் சேவை உணர்ச்சியும் வளர்கின்றன. சேவையும் தியாகமும் அன்பில்லாத வழி இல்லை. அன்பு சில சமயங்களில் வெறியாக மாறிவிடுவதை நாம் பார்க்கின்றோம். தேசத்தின் மேல் கொண்டுள்ள அன்பை தேசபக்தி என்கிறோம். அது சிறந்த பண்பு. ஆனால் அது வெறியானால், மற்ற தேசங்களை வெறுக்கச் சொல்லும். அப்படியேதான் ஜாதிப்பற்றும் மொழிப் பற்றும் வெறியாகும் போது, தீமை செய்யத் தூண்டி விட்டு விடுகின்றது.

"உன் அயலானை உன்னைப் போல் நேசி" என்ற உயர்ந்த உபதேசத்தை எண்ணிப் பாருங்கள். மக்கள் மேல் மாறாத

கருணைகொண்டதால், சிலுவையேறினார் ஏசு பெருமான். துக்கத்தின் காரணத்தைக் கண்டு மக்களுக்குத் துக்க நிவாரணம் அளிக்க தன் அரச போகத்தைத் துறந்தார் புத்தர். நீக்ரோக்கள் பால் இரக்கம் கொண்டு, நிறவெறியை நாட்டைவிட்டு ஓட்ட நினைத்த லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜான் கென்னடியும் தனது உயிரைப் பிறர் பால் கொண்ட அன்புக்காகவே பலியிட்டார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பேருண்மையைத் தன் வாழ்நாளில் கடைப்பிடித்து, அன்பின் வழியில் வாழ்ந்து நம்மையும் வாழ வழி காட்டி வந்த மகாத்மா மதப்பற்று மத வெறியாக மாறிய சிலரால் கொல்லப்பட்டார். அன்பு உயிர்க் குலத்தை வாழ்விக்கும் வான் மழை; வெறி எல்லாவற்றையும் அழித்தொழிக்கும் பெரு நெருப்பு.

மாணவர்களுக்கு நான் அன்போடு கூறுவது ஒன்று உண்டு: **அன்பு வழியே அறவழி, அன்பு வழியே அமைதி வழி, அன்பு வழியே ஆக்க வழி, அன்பு வழியே இன்ப வழி.** அன்பை மறந்து, அறிவையும் ஆற்றலையும் நம்பி மனித சமுதாயம் செயல்படுமானால், விரைவில் இந்த உலகம் சுவர் கட்டாத சுடுகாடாகிவிடும் என்பது திண்ணம்.

நாம் வெய்யிலிலே நீண்ட நேரம் நிற்கலாம். ஆனால் அதே வெய்யிலில் ஒரு புழுவைப் போட்டால், அது துடிதுடித்து மடிந்து போகும். நமது எலும்புக் கூட்டிற்கு வெய்யிலைத் தாங்கும் சக்தி இருக்கின்றது. ஆனால் எலும்பு இல்லாத காரணத்தால் புழு சற்று நேரத்தில் இறந்து போகின்றது. அது போலவே அன்பில்லாதவர்களை அறம் காயும் என்று கூறுகின்றார் வள்ளுவர்:

என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

வாழ்க்கைப் போராட்டத்தில் அன்புக்கு இடமில்லையென்றும், வலிவுடையவர்கள் வலிவற்றவர்களை அழித்தும் அடக்கியுமே முன்னேறி வந்துள்ளனர் என்றும், Struggle for existence, survival of the fittest என்றும் பேசுவதெல்லாம் விலங்கின் தத்துவமே ஒழிய, மனித வளர்ச்சிக்கான தத்துவமல்ல. **மிருகம் எடுக்க எடுக்க வளரும்; மனிதன் கொடுக்கக் கொடுக்க வளர்வான்.** இயற்கையைப் பாருங்கள். மழை கொடுக்கிறது. கதிரவன் வெப்பத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கிறான். பிரதிபலன் கோராமல் கொடுக்கின்றன. அதனால்தான் உயிர்கள் வாழ்கின்றன.

இவைகளையெல்லாம் படைத்த இறைவன் உயிர்கள்பால் கொண்டுள்ள பெருங் கருணையால், பேரருளால் இவ்வுலகை நமக்குப் படைத்துத் தந்தான். உடம்பைத் தந்தான். அறிவைத் தந்தான்; பால் நினைந்தூட்டும் தாயை விட நம்பால் இரக்கம் கொண்டு நம்

மைக் காத்து வருகிறான். தங்களைத் தாமே பேரறிவு படைத்தவர்களாகக் கருதிக்கொண்டு சிலர் கடவுள் இல்லையென்றும், அவனது அருள் இல்லையென்றும் வறட்டு வாதம் பேசுவதை நாம் பார்க்கிறோம். கடவுள் உண்மையையும், அவர் நம்பால் அருளுடையவராக என்றும் நமக்கு நன்மை புரிகின்றார் என்பதையும் விளக்க எவ்வளவோ உதாரணங்கள் காட்டலாம். ஆனால் இங்கு அவர் அருளை விளக்க ஒரே ஒரு உதாரணம் மட்டும் தருகிறேன். நாம் அனைவரும் தாயின் கர்பப்பையில் பத்து மாதம் தங்கியிருந்தோமல்லவா? அந்தக் கர்ப்பப்பை ஓர் இருண்ட குகை; சத்தம் நுழையாத குகை. ஒலியும் உட்புகாத குகையில் அப்போது நமக்குப் பயன்படாத கண்களையும் காதுகளையும் உருவாக்கியது யார்? நாம் நமது அறிவைக் கொண்டு அவைகளை உண்டாக்கிக்கொண்டோமா? ஒளி, ஒலி நிறைந்த உலகில் நாம் வாழப் போவதால் அதற்கெனக் கண்களையும் காதுகளையும் இருட்டு உலகத்திலேயே படைத்த பரமனின் பரங் கருணையை எண்ணிப் பாருங்கள்! குழந்தை பிறந்ததும், அது அழ வேண்டும். நீண்ட நேரம் அழாது போனால் அது இறந்து போகும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். ஏன்? குழந்தை அழும்போது தான் சுவாசப்பையானது விரிந்தும் சுருங்கியும் காற்றை உட்கொள்ளுகிறது. தாயின் கர்ப்பப்பையில் இருக்கும்போது குழந்தை மூச்சு விடுவதில்லை. குழந்தையின் இருதயந்தான் துடிக்கின்றது. சுவாசப்பை வேலை செய்வதில்லை. குழந்தை பிறந்ததும் மூச்சு விட வேண்டுமே என்ற பரிவால் கர்ப்பத்திலேயே சுவாசப்பைகளை அமைத்து அளித்த இறைவனின் கருணை தான் என்னே! சிகரெட் பற்ற வைக்க நெருப்புக் கொடுக்கும் ஒருவருக்கும், இரண்டொரு நிமிடம் உபயோகிக்க ஒரு பென்சிலோ ஒரு பேனாவோ கொடுக்கும் ஒருவருக்கும் "Thank-you" என நன்றி சொல்லும் நாகரிகம் படைத்த நாம், உருத்தெரியாக் காலத்து உளம் மன்னி ஊன்புக்கு கருத்திருத்தி கருணையினால் ஆண்டுகொண்ட கடவுளுக்கு நன்றி செலுத்தாமல் போனால், நமக்கு ஆறறிவு இருந்து என்ன பயன்? பிரார்த்தனை அல்லது வழிபாடு என்பது இந்த நன்றி உணர்ச்சியைத் தெரிவித்துக்கொள்வது தானே அன்றி, அதனால் கடவுளுக்கு ஏதோ லாபம் என்று கருதலாகாது.

இறைவன் இவ்வாறு நம்பால் பிரதிப் பயன் கருதாது அருள் புரிவதால் தான் அவர் குழந்தைகளாகிய நாம் பரஸ்பரம் அன்பு காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அன்பு கனியும் போது அருள் என்று அழைக்கப்படு

இறது. வள்ளுவர் அன்பு பெற்ற அருமைக் குழந்தை அருள் என்று சொல்லுகின்றார். "அருளென்னும் அன்பின் குழவி." பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக இன்பம் இல்லாமை போல, அருள் இல்லார்க்கு மோட்ச இன்பம் இல்லையென உறுதியாகக் கூறுகின்றார்.

அருளில்லார்க் கவ்வுலக
மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

நாம் பௌதிக சாஸ்திரத்திலே பொருள்கள் அழிவதில்லை, சக்தி அழிவதில்லை என்று படிக்கின்றோம் (Indestructibility of matter and energy). ஜடப் பொருள்களை அழியாதன என்று விஞ்ஞானம் கூறும்போது, அவைகளை விடச்சிறந்த அருள், அன்பு, ஈவு, இரக்கம் முதலிய சக்திகள் அழியுமா? நெருப்பின் மேல் கையை வைப்பவனின் கையை அது சுட்டுவிடுகிறது. பனிக் கட்டியின் மேல் கை வைத்தால் தண்ணென்றிருக்கிறது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அப் பொருள்கள் அதனதன் சக்தியைக் காட்டிவிடுகின்றன. அவ்வாறே நன்மையும் தீமையும், அறமும் மறமும், அன்பும் வன்பும் அதனதன் சக்தியைக் காட்டாது ஒழியாது என்பதை உணர்ந்து நடப்போமாக.

—"நல்வழி"

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

கல்விச் சீரமைப்புத் திட்டம்

புது டில்லி, ஜூன். 29—டாக்டர் டி. எஸ். கோத்தாரியைத் தலைவராகக் கொண்ட கல்விக் கமிஷன் இன்று அறிக்கையை சமர்ப்பித்தது. ஆரம்பப் பள்ளிமுதல் சர்வகலாசாலை வரையுள்ள எல்லா நிலைகளிலும் புரட்சிகரமான கல்விச் சீரமைப்பைக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

கமிஷன் சிபார்சுகளைப் பற்றிய யூனியன் அரசாங்கத்தின் முடிவு, மத்தியகல்வி ஆலோசனை போர்டு அதைப் பற்றி விவாதித்த பிறகு அறிவிக்கப்படும். போர்டு அக்டோபர் 14, 15 தேதிகளில் கூடுவதாக உள்ளது. இதற்கிடையில் சர்ச்சைக் கிடமில்லாததும் யூனியன் பொறுப்பில் உள்ளதுமான சிபாரிசுகள் உடனடியாக நிறைவேற்றப்படும்.

டாக்டர் கோத்தாரி கமிஷன் அறிக்கைக்கு வந்த ஒரு மணி நேரத்திற்குள் கல்விமந்திரி திரு. எம். ஸி. சாக்ளா முதல் நடவடிக்கையைப் பற்றி அறிவித்தார். கல்விக் காரியதரிசி தலைமையில் சிபாரிசுகளைப்பரிசீலிப்பதற்கான தனிப் பிரிவு கல்வி மந்திராலயத்தில் அமைக்கப்பட்டுள்ளதென்று திரு. சாக்ளா தெரிவித்தார்.

கோத்தாரி கமிஷன் அறிக்கை 5 லட்சம் வார்த்தைகள் கொண்டதாகும். கல்விக் கமிஷன் அறிக்கை அதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் சமர்ப்பிக்கப்பட்டது. கமிஷனின் 17 அங்கத்தினர்களில் 11 பேர் இதில் கலந்து கொண்டனர். பேராசிரியர் ஷிமாவ்ஸ்கி அறிக்கையில் கையொப்பமிடுவதற்கென்றே நேற்று மாஸ்கோவிலிருந்து விமானத்தில் வந்து சேர்ந்தார்.

தலைவர் டாக்டர் கோத்தாரி நாட்டில் கல்வித் துறைப் புரட்சிக்கான முதல்படியாக கமிஷன் அறிக்கை அமையுமென்று நம்புவதாகக் கூறினார்.

கல்வி மந்திரி திரு. சாக்ளா இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். சிபாரிசுகளை நிறைவேற்றுவது என்று எண்ணியிருக்கிறது. இது வெறும் சரித்திரக் கதையாவதை நான் விரும்பவில்லை என்று கூறினார்.

அறிக்கை விவரம்

கல்விக் கமிஷன் கல்வித் துறையில் கடுமையான சீரமைப்பைக் கோருகிறது. இப்போதைய கல்வி முறையில் ஏறக்குறைய புரட்சிகர மாறுதல் காணப்பட வேண்டும்.

நாட்டின் முன்னேற்றம், பந்தோபஸ்து, க்ஷேமநலனுக்கான

கருவியாக அமையும் விதத்தில், விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும், இந்தியக் கலாசாரத்திற்கும், மதிப்புக்குரிய பண்புகளுக்கும் பொருந்தியதாகவும் இப்போதைய கல்வி முறையை அடியோடு மாற்றியமைக்க வேண்டும் என்று கமிஷன் கூறுகிறது.

ஆரம்பக்கல்வி முதல் சர்வகலாசாலைக் கல்வி வரையில் எல்லா நிலைகளிலும் மாறுதல் காண்பதற்கான பெரும் சிபாரிசுகளைக் கொண்ட இந்த அறிக்கை 1500 பக்கங்கள் கொண்டது. பல்வேறு அத்தியாயங்களின் உள்ளுறை விஷயங்களை விளக்கும் 3000 பக்கங்கள் கொண்ட துணைத் தொகுப்பு ஒன்றும் உள்ளது.

தேசிய அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு கல்வி முறை மாற்றத்தை நிறைவேற்ற உறுதியுடன் பெரும் அளவில் நடவடிக்கை எடுக்கும்படி கமிஷன் வற்புறுத்தியுள்ளது.

சாக்ளா உறுதி

இன்று நிருபர்கள் கூட்டத்தில் அறிக்கையை வெளியிட்ட மந்திரி சாக்ளா கமிஷனின் கோரிக்கைக்கு பதிலளிப்பது போல, அறிக்கையை மூலையில் கட்டு கட்டிப் போட்டு விடப் போவதில்லை என்று கூறினர். கமிஷன் சிபாரிசுகள் அமலாகும் முறையைக் கண்காணிக்க கல்வி மந்திராலயத்தில் தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள தென்றும் தெரிவித்தார்.

முக்கிய சிபாரிசுகளை நிறைவேற்றக் கோரிவிட்டு கமிஷன் அறிக்கை மேலும் கூறுவதாவது.

நடப்பு நிலவரத்திலேயே ஓட்டுப் போடவோ, நம்பிக்கை இல்லாமல் தயக்கத்துடன் நடவடிக்கை எடுக்கவோ முயன்றால், பழைய சமநிலையைக்கலைப்பதற்கு முன்னிருந்ததை விட, நிலைமை மோசமாகிவிடும்.

பொதுக் கல்விக்கான பொதுப் பள்ளிப்பயிற்சி முறையை தேசிய இலக்காக கமிஷன் நிர்ணயித்துள்ளது. கல்வி முறை மாறுதல் பல கட்டங்களில் அமையும். இது 20 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

கமிஷன் அரசாங்கத்தின் முன்னிலையிலும், மக்களுக்கும் பிரும்மாண்டமான பணியை வைத்துள்ளது இதன் சாராம்சம் பின்வருமாறு:-

(1) ஆரம்பக் கல்வி பலன் தரத்தக்க விதத்தில் பெரிய அபிவிருத்தி காண வேண்டும். (2) பொதுக் கல்விப் பயிற்சியில் வேலை செய்யும் அனுபவம் இணைந்திருக்க வேண்டும். (3) செகண்டரிக் கல்வித்துறையில் தொழிற் பயிற்சி சேர்ந்தமைய வேண்டும். (4) ஆரம்பப் பள்ளி முதல் சர்வகலாசாலை வரையில் எல்லா நிலைகளிலும் ஆசிரியர்களின் போதனைத் தரம் உயர வேண்டும். (5) எழுத்தறிவின்மையைப் போக்க போதுமான அளவுக்கு ஆசிரியர்கள் தொகை இருக்க வேண்டும். (6) சர்வகலாசாலைத் துறையில்

6 பெரிய சர்வகலாசாலைகளிலாவது சர்வதேச தரத்தில் அமைந்த முதல்தரப்பட்டபிற்காலக்கல்விப் பயிற்சியும், ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும். (7) உயர்தர மேல்படிப்பு ஆராய்ச்சி கேந்திரங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற மான்யக் கமிஷன் வேலை, திட்டத்தை பலப்படுத்த வேண்டும். (8) பள்ளிக்கூட கல்வி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் இந்திய அரசாங்கத்துக்கு ஆலோசனை கூற யூனியன் கல்வி மந்திராலயத்தில் தேசிய பள்ளிக் கல்வி போர்டு நிறுவப்பட வேண்டும். (9) கல்வி பூராவும் கட்டணமின்றி கிடைப்பதற்கான நிலை எய்த பாடுபட வேண்டும், முதற்கண் நான்காவது திட்டம் முடிவதற்குக் கூடுமான வரையில் ஆரம்பக் கல்வியானது கட்டணமின்றி கிடைக்க வேண்டும் (10) கல்வித் திட்டத்திற்கான செலவு 1965-66ல் ரூ. 600 கோடியாக உள்ளது. 1985 86—ல் இது ரூ. 4000 கோடி அளவில் போய் நிற்கும்.

கல்வி போதுமான அளவுக்கு முன்னேற வேண்டுமெனில் அடுத்த 20 ஆண்டுகளில் கல்விச் செலவு தலைக்கு ரூ. 54 என்ற விகிதத்தை எட்டவேண்டும். இப்போது தலைக்கு கல்விச் செலவு விகிதம் ரூ. 12 ஆகும்.

அடுத்த இருபது அல்லது 30 ஆண்டுகளில் கல்வித் துறையின் பல்வேறு பகுதிகளில், பள்ளிக் கல்விக்காக நிதி வசதிகளில் மூன்றில் இரு பங்கும், உயர்தரக் கல்விக்காக மூன்றில் ஒரு பங்கும் செலவிடப்பட வேண்டும். கல்வி வேலை திட்டங்களில் முக்கியத்துவம் பத்து ஆண்டுக்கொரு முறை மாற வேண்டும்.

அகில இந்திய கல்வி உத்யோக முறை

அகில இந்திய கல்வி உத்யோக வர்க்கத்தை அமைக்க வேண்டும். விசேஷக் கல்விப் பொறுப்புகளுக்கேற்ற வகையில் ராஜ்யங்களில் கல்வி இலாகாக்கள் சீரமைக்கப்பட வேண்டும்.

பத்து ஆண்டுகள் பள்ளிக் கல்விக்கு

1965-75ல் பத்து ஆண்டுகளுக்கான கல்வித்திட்டத்தில் பள்ளிக்கூடக் கல்வி செலவு முக்கியத்துவம் பெறவேண்டும். (1) பள்ளிக்கூட ஆசிரியர்களின் ஊதியங்கள் உயர வேண்டும். (2) பி. யு. சி. இண்டர் வகுப்புகள் கல்லூரிகளில் இருந்து பள்ளிக்கூடங்களுக்கு மாற வேண்டும். (3) எல்லாக் குழந்தைகளுக்கும் குறைந்த பட்சம் 5 ஆண்டுக் காலம் உருப்படியான கல்விப் பயிற்சி அமைய வேண்டும். (4) செகண்டரிக் கல்வித்துறையில் கைத் தொழில் பயிற்சி.

ஆசிரியர்களுக்கான மகா சாஸனம்

ஆசிரியர்கள் அந்தஸ்துபற்றிய கமிஷன் சிபார்சுகளை "ஆசிரியர்கள் மகாசாஸனம்" என்று மந்திரி சாக்ளா நிருபர்கள் கூட்டத்தில் கூறினார். இதை நிறைவேற்றுவதற்கான நிதி வசதிகளை அர

சாங்கம் பெற இயலுமென்று நம்புவதாகக் கூறினார்.

செகண்டரிக் கல்விப் பயிற்சி பெற்று, இரண்டுவருஷ போதனை முறைப் பயிற்சி பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு ரூ. 150 சம்பளம் தரப்பட வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்குத் தரப்படுவது போன்ற கிராக்கிப்படி தரப்பட வேண்டும். ஆசிரியர்களின் சம்பளங்கள் ஐந்தாண்டுகளுக்கொருமுறை மறுபரிசீலனைக்கு வரவேண்டுமென்று கமிஷன் சிபாரிசு செய்துள்ளது.

மொழிப் பிரச்னை

மும்மொழிப்பயிற்சி திட்டத்தைத் திருத்தியமைக்குமாறு கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. புது முறையின் கீழ், தாய்மொழி அல்லது பிராந்திய மொழியும், யூனியன் ஆட்சி மொழியான இந்தி அல்லது துணை ஆட்சி மொழியான ஆங்கிலம், மற்றும் நவீன இந்திய மொழி அல்லது ஐரோப்பிய மொழி என்ற வகையில் மொழிப் பயிற்சி அமைய வேண்டும்.

ஆரம்பப் பள்ளி மொழி

ஆரம்பப் பள்ளிக் கூடத்தில் கீழ் வகுப்புகளில் மாணவர்கள் தாய் மொழி அல்லது பிராந்திய மொழி மட்டுமே பயிலுவார்கள். உயர்தரத்துவக்கப்பள்ளி வகுப்புகளில் இரண்டு மொழிகள் பயில வேண்டும். தாய் மொழியுடன் இந்தி அல்லது ஆங்கிலம் பயில வேண்டும். மூன்றாவது மொழியாக நவீன இந்திய மொழி அல்லது ஐரோப்பிய மொழியை செகண்டரிப் பள்ளியின் கீழ் வகுப்புகளில் பயில வேண்டும். செகண்டரிக் கல்வியில் மேல் வகுப்புகளில் மாணவர்கள் இரண்டு மொழிகளையே கட்டாயம் படிக்க வேண்டியிருக்கும்.

இந்தி அவரவர் விருப்பத்தின் பேரில் படிக்கும் வகையில் அகில இந்திய வேலைத் திட்டத்தைமேற்கொள்ள வேண்டும். விரும்பாதவர்கள் மீது இந்தியைத் திணிக்கலாகாது. அகில இந்திய ஸ்தாபனங்களில் ஆங்கிலம் போதனை மொழியாக நீடிக்க வேண்டும். சில பாதுகாப்பு ஷரத்துக்களுக்குக் கட்டுப்பட்டு இந்தியைக் கொண்டு வருவதை நாளடைவில் விஸ்தரிக்க வேண்டும்.

உயர்தர வகுப்புகளிலும் தாய் மொழி மூலம் போதிக்கலாம். ஆனால் போதனை மொழி மாறுதலைப்பூர்த்தி செய்யவேண்டும். அதை ஆட்சி மொழியாக்கி, பிராந்திய மொழி பயின்றவர்களுக்கு உத்தியோகங்கள் கிடைக்குமென்ற உறுதியை ஏற்படுத்த வேண்டும்.

நன்கு இணைக்கப்பட்ட கல்வி முறையை கமிஷன் சிபாரிசு செய்துள்ள 12 ஆண்டு பள்ளிக் கூடப் பயிற்சி; 3 வருஷப்பட்டப் படிப்புக்கான கல்லூரிக் கல்வி; பின்பு இரண்டாவது பட்டத்திற்கான இரண்டு அல்லது 3வருஷப் பயிற்சி என வகுத்துள்ளது.

பள்ளிக்கூடக் கல்வியில் விஞ்ஞானத்துக்கும், கணிதத்துக்கும்

முக்கியத்துவம் தருகிறது. மொழிப் பயிற்சிக்கான முக்கிய சிபாரிசுகள் உள்ளன. மும்மொழி பற்றிய பரிந்துரைகள் முக்கிய மாகுமென திரு. சாக்ளா எடுத் துரைத்தார். பெரிய சர்வகலா சாலைகளில் ஆங்கிலம் போதனு மொழியாக இருக்க வேண்டும். மற்றபடி சர்வகலாசாலைகள்பத்து ஆண்டுகளில் பிராந்திய மொழி யில் போதிக்கும் வகையில் மாறு தல் காணவேண்டும்.

தொழில் நுட்பக் கழகங்களில் ஒன்றும், விவசாயப் பல்கலைக்கழ கம் ஒன்றும், மற்றும் 4 சர்வகலா சாலைகளும் பட்டப் பிற்காலமேல் படிப்பு, ஆராய்ச்சித் துறைக்கு மாறவேண்டும். பட்டப்பிற்காலக் கல்வியும், ஆராய்ச்சியும் சர்வ தேசத் தரத்திற்கேற்ப அமைய வேண்டும்.

கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் பொறுக்கானவர்களை தெரிந்தெடுத்தல் முறையைப்பின் பற்ற வேண்டும்.

மேல் கல்வித் துறையில் பகு திக் காலப் பயிற்சி, தபால் மூலம் போதனை விஸ்தரிக்கப்பட வேண் டும். மேல் கல்விக்கு வருவோரில் மூன்றில் ஒரு பங்கு மாணவர்கள் தபால் மூலம் போதனை, மாலைக் கல்லூரிகளில் சேருவதற்கு வழி செய்ய வேண்டும்.

செகண்டரி கிரேடு போதனு முறைப்பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் ரூ. 150-ல் துவங்க வேண்டும். இது 20 ஆண்டுகளில் படிப்படியாக உயர்ந்து ரூ 250 ஆகும். ஆசிரி யர்களில் 15 சதவிகிதம் பேருக்கு ரூ. 250-300 விசேஷத் தேர்வு கிரேட் இருக்கும். பட்டம்பெற்று ஒரு வருஷம் போதனு முறைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சம் பளம் ரூ. 220-ல் துவங்கி, இரு பது ஆண்டுகளில் ரூ. 400 வரை எட்டும். அவர்களில் 15 சதவிகி தம் பேருக்கு ரூ. 400-500 விசேஷத் தேர்வு கிரேட் அமைய வேண்டும். பள்ளிகளில் பட்டப் பிற்கால மேல் படிப்புத்தகுதி பெற்றவர்களுக்கு ரூ. 300-600 கிரேட் ஏற்படுத்த வேண்டும். கல்லூரிகளில் இதுவே ஆரம்ப விரிவுரையாளர் ஊதியமாக இருக்கும். தலைமை ஆசிரியர்கள் ஊதியம் இந்தக்கிரேடில் இருக்கும்.

கட்டாய சமூக சேவை

எல்லா மாணவர்களுக்கும் சமூகத் தொண்டும், தேச சேவையும் கட்டாயமாக இருக்க வேண்டும். தேசிய மாணவர் படை இப்போதுள்ளபடியே நான்காவது திட்ட முடிவுவரை இருக்கும்.

பள்ளிக்கூடங்களில் பொதுக் கல்வி ஆறுவது வகுப்பு வரையில் இருக்கும். 7-வது வகுப்பில் அல்ல 10வது வகுப்பின் இரண்டு கட்டங்களில் தொழில் கல்விக்கு மாறுவர்.

ஒழுக்கம்

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், ராஜ்ய சர்க்கார்கள், அரசியல் கட்சிகள் அவரவர் கடமையைச் செய்தால் மட்டுமே

மாணவர்களிடை ஒழுங்கு பாட்டை நிலை நாட்ட முடியும். மாணவர்களின் அறிவையும், சமூக உணர்ச்சியையும் பயன் படுத்த கல்விச் சாலைகளில் அளிக்கும் தனிப்பட்ட வாய்ப்புகள் ஒழுங்கு முறையை நிலை நாட்டும்.

பெரிய நகர்களில் புது சர்வகலாசாலைகள்

டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பெரிய நகரங்களில் இரண்டு சர்வகலாசாலைகள் 4-வது திட்ட முடிவில் அமைய வேண்டும்.

கமிஷன் பணி செலவு 16 லட்சம்

கமிஷன் பணி முடிப்பதற்கு 21 மாதங்கள் பிடித்தன. 101 கூட்டங்களில் ஆலோசனை நடத்தியது. 2400 மகஜர்களையும், குறிப்புகளையும் பரிசீலித்தது. 9000 பேரை விசாரித்தது. கமிஷன் செலவு ரூ. 16 லட்சம் ஆகியது.

—“ தினமணி ”

வயது ஏற ஏற, சிறு செயல்களிலே பெருமையை மேலும் மேலும் நாடலையே என்னிடம் காண்கின்றேன். பெரிய மனிதர் ஒருவர் எவ்வாறு உண்கிறார் உடுக்கிறார் என்பதையும் தமது வேலைக்காரரிடம் எவ்வாறு பேசுகிறார் என்பதையும் அறியவே எனக்கு விருப்பம். ஸர். பிலிப் ஸிட்னீ என்பவரின் பெருமையைக் காண அவாவுகிறேன்! இறக்கும் தருவாயிலும் பிறரது தாகத்தை நினைவார் சிலரே. ஆனால், பெரும் பதவி பெறின் பெரியோன் கோழையாயினும் தீரனாவான். உலகமே பார்த்துக் கொண்டு நிற்கிறது எனின், எவனது நெஞ்சுதான் துடியாது? தனக்கியன்ற மிகச் சிறந்ததை இயற்றுமளவும், எவனது நாடி தான் படபட என்றடியாது? க்ஷணந்தோறும் மௌனமாகவும் ஒழுங்காகவும் தனது கடமையை ஆற்றிவரும் புழுவின் பெருமையே உண்மைப் பெருமையென எனக்கு மேலும் மேலும் தோன்றா நிற்கும்.

—சுவாமி விவேகாநந்தர்

திருக்குறளில் வரலாற்றுச் செய்திகள்

[டாக்டர் மா. இராசமாணிக்கனார்]

திருவள்ளுவர் சிலை சென்னை மயிலாப்பூரில் இந்தியக் குடியரசுத் தலைவரால் அண்மையில் திறந்து வைக்கப் பட்டதல்லவா? அதையொட்டி இக்கட்டுரை வெளி யிடப்படுகிறது.

உலகம் அல்லது மனித சமுதாயம் அல்லது ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது ஏதேனும் ஒன்றன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய செய்திகள் முறைப்பட அமைந்திருத்தல் வரலாறு எனப்படும். இந்த இலக்கணக் கண்கொண்டு, திருக்குறள் கூறும் தமிழ்ச் சமுதாய வரலாற்றைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருக்குறளின் காலம்

எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகியவற்றின் காலம் ஏறத்தாழ கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகள் ஆகலாம் என்பது ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொண்ட உண்மையாகும். அந் நூற்களில் திருக்குறளின் கருத்துக்களும் சொற்களும் தொடர்களும் எடுத்தாளப்பட்டிருத்தல் அறிஞர் அறிந்ததேயாகும். எனவே, திருக்குறள் அவற்றுக்கு முற்படத் தோன்றியது என்று கூறலாம். அதன் காலம் தொல்காப்பியத்தை அடுத்து கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகளில் ஒன்றாக இருக்கலாம் என்று எண்ணுவது பொருத்தமாகும். இனி, அதன் கண் காணப்படும் வரலாற்றுச் செய்திகளைக் காண்போம்.

நாடும் அரசும்

ஒரு மொழி பேசும் மக்கள் வாழும் நிலப்பகுதி நாடு எனப் பெயர் பெற்றது. அம் மக்கள் ஒரு தலைவனது ஆட்சிக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தனர்; அத்தலைவனும் அறிஞரும் வகுக்கும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மக்கள் வாழ்க்கை நடத்தினர். அந்நாட்டைப் பிற நாட்டார் தாக்குதலிலிருந்தும் உள் நாட்டுக் குழப்பங்களிலிருந்தும் காக்கப் படையொன்று அமைந்திருந்தது. நாட்டைச் சுற்றிலும் ஆங்காங்குக் காவற் படைகள் அமைந்திருந்தன. ஆங்காங்குக் கோட்டை கொத்தளங்கள் போன்ற அரண்கள் அமைந்திருந்தன. மலையரண், காட்டு அரண், நீர் அரண் என்பவை இயற்கையில் அமைந்திருந்தன.

மன்னன் தன் நாட்டு விளைச்சலை விளைக்க ஏரிகளையும் குளங்களையும் அமைத்தான்; ஆறு, ஏரி, குளம் ஆகியவற்றிலிருந்து கால்களை அமைத்து நீரை வயல்

களுக்குச் செலுத்தினான்; இங்ஙனம் உழவுத் தொழிலுக்கு வழி வகுத்தான்; உள்நாட்டு வாணிகத்திற்கும் வெளிநாட்டு வாணிகத்திற்கும் உதவி செய்தான்.

அரசன் தன் நாட்டுப் பெருவழிகளைப் பாதுகாத்து வாணிகத்திற்கு இடையூறு நேராமல் காத்தான்; ஆங்காங்குச் சுங்கச் சாவடிகளை அமைத்து, உள்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்குச் செல்லும் பொருள்கள்மீதும், வெளிநாடுகளிலிருந்து உள்நாட்டிற்கு வரும் பொருள்கள் மீதும் ஆயம் (சுங்கம்) விதித்து வந்தான். மன்னன் இவ்வாறே நிலவரி தொழில் வரி முதலிய பலவகை வரிகளை விதித்துக் குடிகளிடமிருந்து அவ்வரிகளைப் பணமாகவோ, பண்டமாகவோ பெற்றான்; நாட்டு மக்களுக்குக் கல்வி வசதியும் மருத்துவ வசதியும் பிற வசதிகளும் வாழ்க்கைப் பாதுகாப்பும் அளித்தான்.

வேந்தன், ஆட்சியில் தனக்கு உதவி புரிய ஆட்சித்திறம் வல்லார் பலரை உடன் வைத்துக் கொண்டான். அவருள் முதன்மை வாய்ந்தவர் எப்போதும் அரசனோடிருந்தனர். அவர் "சூழ்வார்" (குறள்-446) என்றும், அமைச்சர் (631-640) என்றும் பெயர் பெற்றனர். அவர்களை பிற்காலச் சோழர் காலத்தில் "உடன் கூட்டம்" எனப்பட்டனர். மக்கள் வழக்குகளைக் கேட்டு முறை வழங்கும் அறமன்றங்கள் நாட்டில் இருந்தன. படைத் தலைவர்கள் இருந்தனர். பலவகை வரிகளை வாங்கும் அலுவலர் இருந்தனர். நாட்டைக் காவல் புரியும் அலுவலர் இருந்தனர். சுருங்கக் கூறின், இக்காலத்தில் உள்ளன போன்ற ஆட்சித்துறைகள் பல அக்காலத்திலும் இருந்தன என்னலாம்.

அயல்நாட்டு அரசர்களோடு வாணிகம் முதலிய துறைகளில் நட்புக் கொள்ளவும், மன்னன் தன் கருத்துக்களைத் தெரிவிக்கவும் தூதுவர் (681-690) என்ற அலுவலர் இருந்தனர். அவர்கள் பொதுக் கல்வியும் அரசியல் அறிவும் செயலாற்றும் திறமும் சிறக்கப் பெற்றிருந்தனர். இவ்வாறே தன் நாட்டிற்குக் கேடு வாராமற் பாதுகாக்க அரசன் ஒற்றரை (581-590) அலுவலில் அமர்த்தியிருந்தான். அவர்கள் செயலாற்றும் திறனில் சிறந்து விளங்கினர். அரசுக்கு மாறாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கவனிப்பதும் நிகழ்வதனை அவ்வப்போது தம் அரசனுக்குத் தெரிவிப்பதும் அவர்கள் வேலை. அவர்கள் மெய்யாகவே தம் கடமையைச் செய்கின்றனரா என்பதைக் கண்காணிக்க அவர்கள் அறியாமல் வேவு பார்க்கும் வேறு ஒற்றரையும் (588) வேந்தன் அமர்த்தியிருந்தான். திருக்குறள் பொருட்பாலில் இவை பற்றிய விவரங்கள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன.

அரசனிடம் பலவகைப் படைகள் இருந்தன. படையெடுப்பின் போது முன் செல்லும் படை "தார்" அல்லது "தூசிப் படை"

எனப் பெயர் பெற்றது (767). எப்பொழுதும் நிலையாக வேலை பார்க்கும் படை வீரர் "நிலை மக்கள்" (770) எனப்பட்டனர். சிறந்த வீரர், தம் வீரத்தின் அறிகுறியாகக் காலில் சதங்கை அணிந்தனர். அது வீரக்கழல் எனப்பட்டது (777). கொலைத் தண்டனை விதிக்கப் பெறுதல் அக்கால வழக்கம். அத் தண்டனை நிறைவேற்றப் பெற்ற இடம் "கொலைக் களம்" எனப் பெயர் பெற்றது (1224).

அறங்கூற வையத்தார் துலை நாப்போல நடுவு நிலை பிறழாமல் நின்று வழக்குகளை ஆய்ந்து முறை வழங்கினர் (198).

கணை (279), வில் (872), வேல (500), கணிச்சி (கூந் தாலி—1251) ஆகிய படைக் கருவிகள் குறளில் குறிக்கப்பட்டுள்ளன.

ஊர்

மக்கள் வாழ்ந்த இடம் "இல்" (340) எனப்பட்டது. குடங்கர் (890) என்று ஒரு வகை இல்லம் பெயர் பெற்றது. வீட்டின் உள் முற்றம் "அங்கணம்" (730) எனப்பட்டது. இத்தகைய பல இல்லங்கள் சேர்ந்த நிலப்பகுதி ஊர். (1129, 1130, 1158) எனப் பெயர் பெற்றது. ஊரின் உட்பகுதி உள்ளூர் (927, 1012) என்றும், ஊரின் நடுப்பகுதி நடுவூர் (1008) என்றும் பெயர் பெற்றன. ஊரில் வாழ்ந்தவர் ஊரவர் (1147, 1220) எனப் பட்டனர். ஒவ்வோர் இல்லத்திற்கும் பாதுகாப்பாகக் கதவும் தாழும் (1251) இருந்தன. ஊரார் ஆல் உண்ணப்படும் நீர் நிறைந்த குளம் "ஊருணி" எனப்பட்டது (215).

இதனால் ஊரார் உண்பதற்கு என்று தனிக் குளம் ஒன்று இருந்தமை தெளிவு. எனவே, ஊரார் நீராடுவதற்குத் தனிக் குளமும் கால்நடைகளை நீராட்டத் தனிக் குளமும் இருந் திருத்தல்வேண்டும் என்பதும் தெளிவாகும். இதனால் அக்கால மக்களின் சுகாதார அறிவை நாம் நன்கு உணர்ந்து மகிழலாம். இவ்வூருணி என்னும் சொல் வழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இன்றும் மிகுந்திருத்தலைக்காணலாம்.

கல்வி

வள்ளுவர் கல்வியின் தேவையையும், கேள்வியின் தேவையையும், கல்லாமையால் வரும் இழிவையும் தனித் தனி அதிகாரத்தில் விரிவாகக் கூறியுள்ளார். அவர் காலத்தில் சமுதாயத்தில் அற நூல்கள் (183), நீதி நூல்கள் (388), அரசியல் நூல்கள் (636), சமய நூல்கள் (543, 560), அளவை நூல்கள் (725), மருத்துவ நூல்கள் (941, 949) எனப் பல துறை நூல்கள் இருந்தன என்பது தெரிகின்றது. கல்வி கேள்விகளிற் சிறந்த சான்றோர் அவைகள் (67-70, 711-720, 721-730) நாட்டில் இருந்தன. சிறந்த பண்புடையாளர் நட்பு, படிக்கப் படிக்க நயமுணர்த்தும் சிறந்த நூல் போல இனிமை மிக்கது என்று

வள்ளுவர் கூறுதல் (783) நோக்கத்தக்கதாகும்.

உழவு

வயல் "புலம்" (85) எனப்பட்டது. இச்சொல் இன்றும் தெலுங்கு மொழியில் வழக்கில் உள்ளது. வள்ளுவர் உழவைப் பற்றி ஓர் அதிகாரமே விரிவாகப் பாடியுள்ளார். வயலை உழுதல், நீர் பாய்ச்சுதல், எரு விடுதல், களை எடுத்தல், விதைத்தல் முதலிய உழவுத் தொழில்பற்றிய செய்திகள் அவ்வதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. வைத்தூறு (435) (வைக்குவை-வைக்கோல் போர்), அலகு (கதிர்-1034), கூழ் (745-உணவு) என்னும் சொற்கள் கவனிக்கத் தக்கவை. கரும்பு (1078), தினை (433), எள் (888) என்பன வள்ளுவரால் குறிக்கப்பட்டுள்ளன. கேணி (391), ஊற்று நீர் (1161) என்பனவும் உழவுக்குப் பயன்பட்டிருக்கலாம்.

பழக்க வழக்கங்கள்

ஒரு குடும்பத்தார் தம்மிடம் இல்லாத அரிசி முதல் உணவுப் பொருள்களைப் பிறரிடம் ஓரளவு கடன் பெற்று மீண்டும் அதைத் திருப்பித் தரும் வழக்கம் இருந்தது (251). அது "குறியெதிர்ப்பை" எனப்பட்டது. இச்சொல் இன்றும் சேலம் மாவட்டத்தில் "குறியாப்பு" என மருவி வழங்குகிறது. அரசின் தண்டனைகளுள் கொடிய குற்றவாளிகளைப் பையுள் இட்டுத் தரையில் உருட்டுதல் வழக்கம். அப்பொழுது பையுள் இருக்கும் குற்றவாளி மிகுதியும் துன்பட்படுவான். அப்பழக்கத்திலிருந்து தோன்றிய வையே "பையுள்", "இடும்பை" (1045) என்னும் சொற்கள்.

கலைகள்

"பண்" என்பது இராகம். பண்ணோடு பாடும் வழக்கம் இருந்தது (573). குழல், யாழ் என்னும் இசைக் கருவிகள் இருந்தன (66). கால்நடைகளை மேய்க்கும் ஆயன் குழல் ஊதுவது வழக்கம் (1228). இவை அக்கால இசைக் கலைக்குச் சான்றாகும்.

கூத்தாட்டு அவை (332) இருந்தது. இதனால் கூத்துக்கலை வழக்கில் இருந்தமை தெளிவாகும்.

மருத்துவக் கலைபற்றி ஓரதிகாரமே (941-950) குறளில் இடம் பெற்றுள்ளது. நோய் (1091). பிணி (1014). மருந்து (217, 968, 1091, 1241, 1275), சாவா மருந்து (82) என்பன மருத்துவக் கலை உண்மையை நன்கு தெரிவிப்பன ஆகும்.

வாணிகம்

நீட்டி அளக்கும் கோல் (710, 796) என்பது அக்கால நீட்டலளவைக் குறித்தது. குன்றிமணி (277), கழஞ்சு (கால்பலம்), தொடி (ஒரு பலம் 1037) என்பவை நிறுத்தலளவைகள். தராசு என்னும் நிறுத்தலளவைக் கருவி வழக்கில் இருந்தது (118). ஒன்று, இரண்டு ... முதலியன எண்ணலளவைப் பெயர்கள். தொல்காப்பியர் காலத்தில்

"நாலாயிரம்" எனப்பட்ட பேரெண் வள்ளுவர் காலத்தில் "கோடி" எனப்பட்டது. அவர் கோடி என்னும் சொல்லைப் பல இடங்களில் (337, 377, 369, 816, 817, 954, 1005, 1061) ஆண்டுள்ளார்.

பண்பாடு

கல்வி கேள்வி ஒழுக்கம் என்னும் மூன்றின் முதிர்ச்சியால் உண்டாவதே "பண்பாடு" என்பது. அஃதாவது, எண்ணங்களும் செயல்களும் பண்படுதல்–எண்ணங்கள் பண்பட்டுச் செயல்கள் வாயிலாக வெளிப்படுதல். சொற்களாலும் செயல்களாலுமே பண்பாடு அறியப்பெறும். இப் பண்பாட்டுக்குரிய பலவற்றை வள்ளுவர் பல இடங்களில் கூறியுள்ளார். அன்புடையார் என்பும் உரியவர் பிறர்க்கு (72), விருந்தோம்பி வேளாண்மை செய்தல் (84). பணிவுடைமை, இன்சொல் உடைமை (95), நன்றி மறவாமை (108), நடுவுநிலை தவறாமை (113), அடக்கம் உடைமை (112), நாவடக்கம் (127), ஒழுக்கமுடைமை (131), வறியவர்க்கு உதவல் (221), புலால் மறுத்தல் (242), இன்னா செய்தாரைப் பொறுத்தல் (314), பெரியாரைத் துணைக் கோடல் (411), அளவறிந்து வாழ்தல் (479), தன்னடக்கம் (505), சான்றோர் பழிக்கும் வினை செய்யாமை (659), பெருக்கத்துப் பணிவுடைமை (963) போன்றவை பண்பாட்டை உணர்த்தும் ஒழுக்கங்களாகும்.

பிறர் பொருளையும் தம் பொருள்போல் பேணிச் செய்யின், வாணிகம் செய்வார். நல்ல வாணிகம் செய்பவராவர் (120) என்பது வள்ளுவர் கருத்து.

விருப்பம் ஒன்றாலேயே பெருமை பெய்தல் ஒருவற்கு இயலாது என்பதையும், இறைவன் எவனை உயர்த்துவானோ அவனே உயர்வான் என்பதையும், இறைவன் எவனை வீழ்த்துவானோ அவன் வீழ்வான் என்பதையும், அனைவரும் ஒருநாள் ஒரு கணப் பொழுதளவு உணர்வாராயின், அதன்பின் துயரமனைத்தும் முடிவடையும். ஆனால் இயல்பாகவே உள்ளீடில்லாததும், ஒரு விரலை அசைக்கவும் திறமையற்றதுமான அந்த ஆணவம் ஒன்று உண்டோ: 'யான் எவனையும் கிளம்ப வொட்டேன்' எனும் அதன் கூற்றை எத்துணை இகழ்ச்சிக்குரியது என்பது! அப்பொறுமையும், ஒன்று கூடி உழைக்க இயலாமையும்—அடிமை நாடுகளின் இயல்பே அது. அதை உதறியெறிய முயல வேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

உணவுப் பிரச்சினைகளும் சீர்திருத்தமும்

டாக்டர். ராஜம்மாள் பி. தேவதாஸ், எம்.ஏ., எம்.எஸ்ஸி., பிஎச்.டி

முதல்வர், ஜி. அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி,
கோயமுத்தூர்

இன்று நமது நாட்டில் நிலவும் பல பிரச்சினைகளில் அனைவருக்கும் போதிய உணவு இல்லாமை முக்கியமானதாக இருக்கிறது. விவசாயத்தையே மையமாகக் கொண்டுள்ள நமது சமுதாயத்தில், ஏழ்மையும் அதனால் ஏற்படும் தாழ்ந்த வாழ்க்கை நிலையும் தேவையான சத்துள்ள உணவுகளை அடைவதற்குப் பெருந் தடைகளாக உள்ளன. எழுத்தறிவு இல்லாமை, குறைவான சத்துணவு உற்பத்தி, உணவுப் பற்றுக் குறை, பெருகி வரும் மக்கள் தொகை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை உணவுப் பிரச்சினையை மேலும் அதிகரிக்கின்றன. இவற்றின் விளைவாக, உணவுப் பற்றுக்குறை நோய்கள் ஏற்படுகின்றன.

உணவுப் பற்றுக்குறை நோய், தரத்திலும் அளவிலும் போதுமான உணவை உட்கொள்ளாததால் ஏற்படுகின்றன. அவற்றிற்குக் காரணம் உணவுப் பற்றுக் குறை நோய்களால் வாழ்க்கைச் சக்கரம் குறைக்கப்பட்டு, வேலை செய்வதற்கு வேண்டிய சக்தியும் உறுதியும் குன்றிச் சோர்வு விளைகிறது. இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பக்களின் வாழ்க்கைத்தரம் மேலும் மோசமாகிறது. அந்தந்த இடங்களில் கிடைக்கக் கூடியதும், அவரவர்கள் பொருளாதார நிலைமைக்கு ஏற்றவாறு வாங்கக் கூடியதுமான உணவுப் பொருட்களைக் கொண்டு அன்றாட உணவை நல்ல முறையில் திட்டமிட்டுத் தேவையான உணவுச் சத்துக்களை உட்கொண்டால், உணவுச் சத்துப் பற்றுக் குறையால் ஏற்படும் பல தீய விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். சத்துள்ள உணவுகளையும் பெறலாம்.

உணவுப் பிரச்சினைகளைப் போக்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட நமது அரசாங்க சமூக நலத் திட்டத்தில் உணவு உற்பத்தியை அதிகரிப்பது, அதன் விநியோகம், பயன் ஆகியவற்றை நல்ல முறையில் அமைப்பது என்பனவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனினும் உணவுப் பற்றுக்குறை நோய்கள் இன்னும் நீங்கியபாடில்லை. நமது உணவுகளில் கலோரிகள் (calories)

தேவைக்குக் குறைவாக இருப்பதுடன், புரதச் சத்து, இரும்புச் சத்து, சுண்ணாம்புச்சத்து, வைட்டமின் ஏ முதலிய சத்துக்களும் குறைவாக இருக்கின்றன.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு விவசாயத்தில் பெருமளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முதலிரண்டு ஐந்தாண்டு திட்ட காலங்களில் உணவுத் தானியங்களின் உற்பத்தியும், எண்ணெய் விதைகளின் உற்பத்தியும் குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகரித்துள்ளன. இதர உணவுப் பொருட்களின் உற்பத்தி, கால்நடை, கோழிப் பண்ணை, மீன் வளர்ப்பு, பால் பண்ணைகள் ஆகிய துறைகளிலும் முன்னேற்றம் உண்டாகியிருக்கிறது. குறிப்பாக பால் உற்பத்தியில் இன்னும் 21 வருடங்களில் 31-41 சதவீதம் உயர்வு எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் காரணமாக அனைவருக்கும் சத்துள்ள உணவுப் பொருட்கள் பெரும் அளவில் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

விவசாயத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களுடன் சுகாதாரத் துறையிலும் பல நோய்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. இத்தகைய முன்னேற்றங்களுக்கு ஏற்றவாறு மக்களுடைய உணவியல் நிலையிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கும்போது ஏமாற்றம் உண்டாகிறது. நல்ல வருவாய் இருந்தும் தேவையான அளவுக்கு உணவுப் பொருட்கள் கிடைத்தும், உணவுச் சத்துப் பற்றாக் குறையால் அவதிப்படும் குடும்பங்கள் பல. உணவியல் துறையில் மக்களுக்கு அறிவூட்டுவது எவ்வளவு அவசியம் என்பதை மேற்கண்ட உதாரணம் விளக்கும். பல குடும்பங்களில் சத்துள்ள உணவைப் பற்றி அறிந்திருப்பினும், ஏழ்மை காரணமாகத் தாங்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களைத் தங்கள் குடும்பத்திற்குப் பயன்படுத்தாமல் விற்றுவிடுகின்றனர். கிராமங்களில் உற்பத்தியாகிக் கிடைக்கும் பாலில் பெரும்பான்மையான பகுதி அங்குள்ள குழந்தைகளுக்கும் கூட கிடைக்காமல் நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நவ நாகரிகத்தின் பண்டங்களாகிய ஐஸ் கிரீம், குலாப்ஜான், காபி, டீ முதலியன தயாரிப்பதற்காக விற்கப்படுகின்றன. இதனால் பால் உற்பத்தி செய்யப்படும் குடும்பங்களிலேயே போதிய அளவு பால் கிடைக்காமல், வைட்டமின் ஏ, பி. முதலான உணவுச் சத்துக்கள் குறைவாகிப் பல வியாதிகள் தோன்றுகின்றன.

உணவுப் பற்றாக்குறை ஒரு புறமிருக்க, உணவுப் பக்குவ முறைகளால் உண்டாகும் விரயங்கள் அதிகம். அரிசி போன்ற உணவுப் பொருட்களைத் தீட்டுவதால் பல தீமைகள் ஏற்படுகின்றன. வாழ்க்கையில் வசதி அதிகமுள்ளவர்கள் வெள்ளையாய்த் தீட்டப்பட்ட அரிசியையே நாகரிகமெனக் கருதி விரும்பி உண்கின்றனர். முழுக் கோது

மை மாவிற்குப் பதிலாக மைதா மாவையும், வெல்லத்திற்குப் பதிலாகச் சர்க்கரையையும், சாதாரண எண்ணெயை விடுத்து வனஸ்பதி போன்ற செயற்கை எண்ணெய்களையும் நாடுகின்றனர் அநேகர். இத்தகைய போக்குகளால், உணவில் கிடைக்கக் கூடிய பல உணவுச் சத்துக்களை இழந்து விடுகின்றனர்.

மேலும் உணவுப் பொருட்களை அதிக நீரில் வேகவைத்து சமைக்கும் நீரை அகற்றும்போது, அவற்றிலுள்ள உணவுச் சத்துக்கள் அந்த நீரில் கரைந்து, வீணாகி விடுகின்றன. காய்கறிகளை அரிந்து அரிந்த துண்டுகளை நெடுநேரம் காற்றுப் படும்படி வைக்கும்போதும், அதிக நீரில் வேகவைக்கும்போதும், சமைத்த நீரை அகற்றும்போதும் உணவுச் சத்துக்கள் சேதமாகின்றன. உணவுப் பொருள்களை வெகு நேரம் வேக வைப்பதாலும், எண்ணெய்யில் பொரிப்பதாலும் வைட்டமின் ஏ. ஸி. போன்ற உணவுச் சத்துக்கள் பெரிதும் அழிக்கப் படுகின்றன.

பல குடும்பங்களில் பச்சைக் காய்கறிகளை உபயோகிப்பது அபூர்வம். மேற்கு வங்காளத்திலும், சென்னை ராஜ்யத்திலும் பசுமைக் காய்கறி வகைகளை தவிர்த்து, அதிகமான சாதத்தைச் சாப்பிடும் பழக்கம் பரவியுள்ளது. மேலும், மேற்கு வங்காளத்தில் இனிப்பில்லாத பண்டமே கிடையாது. ராஜஸ்தான் டெல்லி, பஞ்சாப் முதலிய பிரதேசங்களில் எண்ணெயில் நெடுநேரம் பொரித்த பலகாரங்கள் பல விசேஷமாக நடமாடுகின்றன. சென்னை, ஆந்திரம் ஆகிய ராஜ்யங்களில் அளவுக்கு மீறிய காரத்தைச் சேர்த்துச் சாப்பிடுவது வழக்கமாக உள்ளது. குஜராத்தில் உணவுடன் அதிக எண்ணெய் சேர்த்துச் சாப்பிடுவது வழக்கம்.

இங்ஙனம் நெடுங்காலமாகப் பரவியிருக்கும் தீய உணவுப் பழக்க வழக்கங்கள், உணவுச் சத்துப் பற்றாக் குறையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. உணவுப் பொருட்களைத் தக்க முறையில் பக்குவப்படுத்திப் பத்திரப் படுத்தாமல் இருப்பதாலும், அவற்றை எலி, புழு, பூச்சிகள் முதலியன உண்ண விடுவதாலும் ஏராளமான உணவுப் பொருட்களும், சத்துகளும் சேதமாகின்றன. சுமார் 10 சதம் உணவுப் பொருட்கள் அறுவடையின் போதும், தவறான முறையில் உபயோகிக்கும் போதும் வீணாகின்றன. இதற்குக் காரணம் தகுந்த முறையில் உணவுப் பொருட்களைப் பாதுகாக்க வசதிகளும், வழிகளும் தெரியாமலிருப்பதே. சரியான உணவுத் திட்டங்கள், அவற்றைத் தயார் செய்யும் முறைகள் ஆகியவற்றைக் காட்டும் நூல்கள் இல்லாமல் பல உணவுப் பொருட்கள் வீணாக்கப்படுகின்றன. குடும்பத்திற்குத் தேவையான அளவு தானிய வகைகளை உபயோகித்தால் வீணாகும் உணவைத் தவிர்க்

கலாம். நமது நாட்டில் தேவைக்கு மேல் உணவு தயார் செய்யும் கெட்ட வழக்கம் இருந்து வருகிறது. நமது வீடுகளில் நடக்கும் விழா, விருந்து, திருமணம் முதலான வைபவங்களில் அதிகமான அளவு உணவுப் பொருட்களை வீணுகச் செலவு செய்கிறோம்.

உணவுப் பொருட்களைக் கலப்படம் (adulterated) செய்து விற்பதால், பல நோய்கள் உண்டாகின்றன. சாதாரணமாக மார்க்கெட், பஜார் போன்ற பொது இடங்களில் விற்கப்படும் உணவுப் பொருட்கள் அசுத்தமாகவும், கலப்படமாகவும் இருக்கின்றன. அரிசி, பருப்பு, மாவு முதலானவைகளையும், பால் நெய், தேன், எண்ணெய் வகைகளையும், மணல், மரத்தூள், தண்ணீர், மிருகக் கொழுப்பு, அதிமதுரம், விலை குறைந்த எண்ணெய்கள் முதலியன சுலமாகக் கலப்படம் செய்து விடுகின்றனர். நல்ல நெய்க்குப் பதிலாக வனஸ்பதியை நெய் என்று விற்கின்றனர். இதனுல் தினசரித் தேவையான உணவுச் சத்துக்கள் பெருமளவு குறைந்துவிடுகின்றன. இவற்றை யெல்லாம் சர்க்கார் தகுந்த சட்டங்களை அமைத்துத் தடுக்க வேண்டும். குறிப்பாக உணவுக் கலப்படம் செய்வோரைப் பொது மக்களின் எதிரிகளாகக் கருதிக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இவ்விஷயங்களில் மக்களின் கவனத்தைத் திருப்பிச் சுத்தமான உணவுப் பொருட்களைக் குறைவான விலையில் பெற ஆவன செய்ய வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் சமையலறையை அடுத்தாற்போல் ஒரு சிறு காய்கறித் தோட்டம் இருத்தல் வேண்டும். தினசரித் தேவையான உணவுப் பொருட்களை அந்தச் சிறு தோட்டத்திலிருந்தே பெற வேண்டும் இதனுல் செலவு குறையும்; உடலுறுதி பெருகும்.

மத்தியப் பிரதேசம், வடபம்பாய், ராஜஸ்தான், டெல்லி, உத்தரப் பிரதேசம் போன்ற ராஜ்யங்களில் சீதோஷ்ணம் காரணமாக உணவுப் பொருட்கள் கெட்டு விடுகின்றன. இவ்வாறு ஏற்படும் உணவுச் சேதத்தை 'ஜனதா குளிர் பானைகளை' உபயோகித்துத் தவிர்த்துக் கொள்ளலாம். "ஜனதா குளிர் பானைகள்" மண்ணுல் ஆனவை. விலையும் குறைவு.

சமையலறையைத் தக்க முறையில் அமைக்க வேண்டும் அப்படி அமைப்பதால், சமைக்கும் போது ஏற்படும் சேதங்களைத் தடுக்கலாம். மேலும் சமைக்கச் செலவாகும் நேரத்தையும் சக்தியையும் மீதப் படுத்தலாம். புகையில்லா அடுப்பு, நீர் உறிஞ்சுக் குழிகள், பாத்திரங்கள் கழுவுமிடம் முதலியவற்றைச் சரியான முறையில் அமைக்கும்போது, பல நன்மைகள் ஏற்படுகின்றன.

பெண்களுக்குச் சீருணவைப் பற்றி (balanced diet) தெரிந்துகொள்ள வழி செய்ய வேண்டும். சரியான உணவைத் தேர்ந்தெடுத்தல், சமையல் முறை

கள், பரிமாறும் முறைகள், பக்குவப படுத்தும் வழிகள் ஆகியவற்றை அவர்களுக்குப் புகட்டுவது அவசியம்.

வீடுகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், மற்ற பொருட்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து, புதுப் புது வழிகளைத் தெரிந்து, அவற்றை மக்கள் அறிந்து அதன்படி நடக்க ஆவன செய்ய வேண்டும். தேவைக்குக் குறைவான உணவைச் சாப்பிடும் வழக்கம் நமது நாட்டில் பெரும்பான்மையான இடங்களில் உள்ளது. அதே சமயத்தில் தேவைக்கு மேல் உண்ணும் மக்களும் உள்ளனர். அதிக உணவு உண்பதால், உடல் பெருக்கம் ஏற்படுகிறது. நீரிழிவு, இரத்தக் கொதிப்பு, இருதய நோய்கள் போன்ற நோய்களும் ஏற்பட ஏதுவாகிறது. எனவே, அளவிலும் சத்துக்களிலும் சீராக உள்ள உணவே உடலுக்கு நல்லது என்பதை மக்கள் உணர்ந்து கடைப்பிடிக்க அவர்களுக்கும் வழி காட்ட வேண்டும்.

குழந்தைகள், கர்ப்பிணிகள், பால் கொடுக்கும் தாய்மார்கள் முதலியோர் பாதுகாப்பு (protective) உணவுகளைத் தினமும் உட்கொள்ள வேண்டும். குறிப்பாக பால் கொடுக்கும் தாய்மார்கள் குழந்தைக்குத் தேவையான எல்லாவித சத்துக்களையும் தம் பால் மூலமாகத் தருவதால், சிறந்த உணவை உட்கொள்ள வேண்டும். தாய்ப் பாலை நிறுத்தும்பொழுதும், அதற்குப் பதிலாக வேறு உணவுப் பொருட்களைக் கொடுக்கும் பொழுதும் உணவுச் சத்துக்கள் நிறைந்த உணவுகளைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். இதனால் சோகை பாய்வது போன்ற வியாதிகள் வராமல் தடுக்கலாம். குழந்தைகள் நன்கு வளர அவர்களுக்கு நல்ல உணவு அவசியம். சீருணவு கிடைக்காவிட்டால், குழந்தைகளின் வளர்ச்சி குன்றிவிடும்; பல நோய்கள் உண்டாகும். போதிய வருவாய் இல்லாதோர் பால் முட்டை, மீன், இறைச்சி போன்ற விலையுயர்ந்த உணவுப் பொருட்களுக்குப் பதிலாக நிலக்கடலைப் பால், மீன் எண்ணெய், சர்க்கரை வள்ளிக் கிழங்கு போன்ற விலை குறைந்த உணவுப் பொருட்களை உபயோகிக்கலாம். முளைகட்டிய பாசிப் பயிற்றில் அதிக அளவுக்கு வைட்டமின் ஸி உள்ளது. நிலக்கடலைப் பாலில் இருந்து கிடைக்கும் புரதச் சத்து இறைச்சி, மீன் ஆகியவற்றிற்கு ஒப்பாக உள்ளது.

சத்துணவைப் பெறுவதற்கு அதிகப் பணம் செலவழிக்க அவசியமில்லை. கெட்ட உணவுப் பழக்கங்களை மாற்றி விடுவதே சீருணவு பெறுவதற்கு முதற் படியாகும். விலை மலிவான, ஆனால் சத்து நிறைந்த உணவுகளைச் சேர்த்துக்கொள்ளலாம். மைசூர் சென்னை ராஜ்யங்களில் ராகியிலிருந்து தயாரிக்கப்படும் களி, கூழ் முதலான உணவுகளுடன் பால், மோர், பச்சைக் காய்கறி

வகைகளைக் கலந்து உண்கின்றனர். இதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

உணவியல் அறிவு வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. அந்த அறிவு தேச வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது. உணவியலை நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவசியம் கற்கவேண்டும். ஆகவே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உணவியல் ஒரு முக்கிய பாடமாக இருத்தல் வேண்டும். அரசாங்கமும், உணவியல் பற்றிய எல்லா வேலைகளுக்கும் முதலிடம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால், நாட்டு மக்கள் நிலை உயரும்.

இந்தியா பல்வேறு மக்களையும் நாகரிகங்களையும் கொண்ட நாடு. எனவே, அவரவர் பழக்க வழக்கங்களுக்கும், வசதிக்கும், தகுதிக்கும் ஏற்பச் சத்துணவை அனைவரும் பெறவேண்டும். அத்தகைய நல்ல உணவைப் பெறப் பல வழிகளிலும் பாடுபட வேண்டும். நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை நம் நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ற முறையில் சிறப்பாகப் பரிமாற வேண்டும். தவறான முறையில் பரிமாறும்போது, நல்ல உணவுப் பொருட்களும் சேதமாகின்றன.

மக்களுக்குச் சத்துள்ள உணவுகளின் அவசியத்தை உணர்ந்து, சுகாதார முறைகளை அறிந்து, தங்களுக்குத் தேவையான சத்துள்ள உணவுகளை உற்பத்தி செய்ய ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் உணவு உற்பத்தியிலும் சுகாதாரத் துறையிலும் நிரந்தரமான முன்னேற்றம் உண்டாகும். எனவே பெருவாரியான அளவில் உணவியல் அறிவைப் பரப்புவதற்கும் மக்கள் நிலையை உயர்த்துவதற்கும் தேசம் முழுவதிலும் பல திட்டங்கள் அமுலில் வர வேண்டும். உணவுப் பொருட்களைத் தக்க முறையில் பக்குவப்படுத்தி, நெடு நாள் கெடாமல் பாதுகாக்கக் குடும்பப் பெண்களுக்குப் பயிற்சியை அளிக்க வேண்டும். குறிப்பிட்ட பருவங்களில் ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடிய மாம்பழங்கள், கொய்யாப் பழங்கள், தக்காளிப் பழங்கள் முதலியவற்றைப் பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டால், பல நாட்கள் கெடாமல் இருக்கும். பலகிராம சேவகிகள், முக்கிய சேவகிகள், மனையியல் நிபுணர்கள் முதலியோர் உணவுச் சத்துப் பற்றாக்குறைப் பிரச்சினைகளுக்கு வட்டார ரீதியாக வழி காண முயற்சி செய்து வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம சேவகிகள், நர்சுகள், மருத்துவப் பெண்கள், விவசாய கைத்தொழில் பொறியியல் கதர் விஸ்தரிப்பு ஆபீஸர்கள், டாக்டர்கள் முதலியோர் சளைக்காது உழைத்து வருகின்றனர். இத்தகைய கிராம அபிவிருத்திப் பணியில் ஈடுபடும் ஆண்களும் பெண்களும் உண்மையிலேயே தியாக மனப்பான்மை கொண்டவர்கள்.

“நல்வழி”

ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி : முதலமைச்சர் உறுதி

மாணவிகளுக்கு 5–வது வகுப்பு வரை இலவச பாட புத்தகம் தரப்படும்

கோயமுத்தூர், ஏப். 28—பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவதுடன் ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று முதன் மந்திரி பக்தவத்சலம் இன்று கூறினார்.

இன்று இங்கு ஆசிரியர்கள் சங்கங்களின் கூட்டு ஆண்டு விழாவை அவர் ஆரம்பித்தார். நல்ல வீட்டு வசதி பற்றி ஆசிரியர்கள் கோரிக்கையிடம் தான் மிகுந்த அனுதாபம் கொண்டிருப்பதாக அவர் சொன்னார். அசெளகரியமான வீடுகளில் ஆசிரியர்கள் வசித்துத் துன்பப்படக் கூடாது. அது அவர்கள் வேலையைப் பாதிக்கும். ஆசிரியர்களுக்கு வீடுகளைக் கட்டுவது, பள்ளிக் கூடங்களைக் கட்டும் திட்டத்தின் பாகமாக இருக்க வேண்டும் என்று கூறிவந்திருக்கிறேன். தற்சமயம் கூடிய அளவுக்கு ஆசிரியர்களுக்குப் பல்வேறு அரசாங்க ஜாமைக வசதி திட்டங்களில் இடமளிக்க முழு முயற்சி செய்யப்படும்.

எல்லா உயர் கல்விக்கும் ஆரம்பத்தில் ஆரம்பக் கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்கிறோம். ராஜ்பத்தில் சுமார் 32000 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் ஒரு லட்சம் ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள்.

இந்தக் கல்வியாண்டில் முதல் மூன்று வகுப்புகளில் ஏழைக் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகளை இலவசமாக அளிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. மாணவிகளுக்கு 5வது வகுப்பு வரை இலவச பாடப் புத்தகம் அளிக்கப்படும். இவ்வாறு முதல்வர் கூறினார்.

பாதுகாப்பு நிதிக்கு ஆசிரியர்களின் உதவி பற்றி முதன் மந்திரி குறிப்பிட்டார். அவசர நிலை இனி இல்லை என்று வேறு பலரும், பத்திரிகைகளும் கூறிய போதிலும் நாட்டிற்கு அபாயம் இருப்பதாக ஆசிரியர்கள் உணர்வதை இது காட்டுகிறது என்றார். சீனாவும், பாகிஸ்தானும் தாக்கும் கூட்டு அபாயம் இருப்பதாக யூனியன் பாதுகாப்பு மந்திரி சமீபத்தில் கூறியதை அவர் சுட்டிக் காட்டினார். சிறந்த சாதிக்னைக்காக, கோயமுத்தூர் ஆசிரியர்களை அவர் பாராட்டினார். நாட்டில் மற்றவர்களுக்கு அவர்கள் உதாரணமாக விளங்குவார்கள் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

Association Publishing House

' ஆரம்பக் கல்வி நிலையம் '

94/95, New Street, Mannady, Madras-1.

(For High Schools and Higher Ele. Schools)

Phone : 24544 **Post Box No. 1818**

MATHEMATICS

ஆசிரியர் : பி. வீரராகவன்

சிறுவர் கணக்கு நூல்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·65		
மூன்றும் வகுப்பு	0·87	37	18-5-'66

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஆறும் வகுப்பு	1·50	50	18-5-'66

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், பி.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	1·75	13	16-5-'62

SCIENCE

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·40		
மூன்றும் வகுப்பு	0·50		

ஆசிரியர் : M. விவேகானந்தா பி.எஸ்சி., எல்.டி.,

நான்காம் வகுப்பு	0·75	6	18-5-'66

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : கே. லக்ஷ்மிநாராயணசாமி, பி.ஏ.. எல்.டி.

ஐந்தாம் வகுப்பு	1·25	9	18-5-66

பொது விஞ்ஞானம்

ஆறும் வகுப்பு	1·25	25	18-5-'66

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி.

ஒன்பதாம் வகுப்பு	1·75	33	18-5-66
பதினோராம் வகுப்பு	2·50	35	10-5-'61

HISTORY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

சிறுவர் வரலாறு

மூன்றும் வகுப்பு	0·60

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·87	11	18-5-66
செங்கற்பட்டு	0·87	12	18-5-66
வட ஆற்காடு	0 87	12	,,
தென் ஆற்காடு	0·87	12	,,
சேலம்	0·87	12	,,
கோயமுத்தூர்	0·87	12	,,
நீலகிரி	0·87	12	,,
தஞ்சாவூர்	0·87	12	,,
திருச்சி	0·87	12	,,
மதுரை	0·87	12	,,
இராமநாதபுரம்	0·87	12	,,
திருநெல்வேலி	0·87	12	,,
ஐந்தாம் வகுப்பு	1 00	42	,,
ஆறும் வகுப்பு	1 00	54	,,

SOCIAL STUDY

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5-'62

GEOGRAPHY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

மூன்றும் வகுப்பு

சிறுவர் பூகோளம்

(சென்னை)	0·60

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·62	46	18-5-66
செங்கற்பட்டு	0·62	19	,,
வட ஆற்காடு	0·62	18	18-5-66
தென் ஆற்காடு	0·62	18	,,
சேலம்	0·62	19	,,
கோயமுத்தூர்	0·62	19	,,
நீலகிரி	0·62	19	,,
ஐந்தாம் வகுப்பு	1·00	19	18-5-'66

TAMIL GRAMMER

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் **சொ. முருகேசனார்**

ஆறும் வகுப்பு	0·75	4	16-5-'62
எட்டாம் வகுப்பு (III Form)	0·75	4	10-5-'61

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

புதிய பத்தாம் வகுப்பு	1·25	11	18-5-'60
புதிய பதினோராம் வகுப்பு	1·50	31	10-5'-61

ஐந்தாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
நீதிக் கதைகள்	0·50	17	18-5-60
அறிவுக் கதைகள்	0·50	15	18-5-60

TAMIL NON-DETAILED

ஆறும் வகுப்பு			
அறிவுச் சுடர்	0·62	22	18-5'-66
பத்தாம் வகுப்பு			
நாடும் மக்களும்	1·00	17	18-5-'60

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
தொண்டை நாட்டு மன்னர்	1·00	19	18-5-'60
பூம்புகார்	0·87	16	,,
திரு. வி. க.	0·87	32	13-5-'59

ENGLISH NON-DETAILED

Author: Mrs. Lucy Arul Raj

VI STANDARD

Mother India Supplementary Reader

0·50 49 18-5-66

III Form

VIII STANDARD

Mother India Supplementary Reader

0·62 24 10-5-'61

கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.

2·00 2 5-7-'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, பி.ஏ., பி.டி.

எட்டாம் வகுப்பு	1·00
பத்தாம் வகுப்பு	1·25
பதினோராம் வகுப்பு	1·50

உமாபதி உரை நூல்

மூன்றும் வகுப்பு	0·40
நான்காம் வகுப்பு	0·50
ஐந்தாம் வகுப்பு	0·60
ஆறும் வகுப்பு	1·00
ஏழாம் வகுப்பு	1·25

Association English Premier III Class 0·60

Association English guide IV Class 0·40 n.p.

புது முறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 8·00

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.